بسم الله الرحمن الرحيم نحمده ونصلی علیٰ رسوله الکریم وعلیٰ عبده المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 36

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

01 ஸஃபர் 1443 ஹிஜ்ரி கமரி 09 தபூக் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 09 செப்டம்பர் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

قُلْ اَتَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ مَا لَا يَمْلِكُ لَكُمْ ضَرًّا وَّلَا نَفْعًا ؕ وَاللّٰهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ ○

நீர் கூறுவீராக! அல்லாஹ்வை விட்டுவிட்டு உங்களுக்குத் தீமையோ, நன்மையோ செய்யும் ஆற்றல் இல்லாதவற்றையா நீங்கள் வணங்குகின்றீர்கள்? அல்லாஹ்வே நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான் (5:77)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**பாருங்கள்! குழந்தை அழுது புலம்பும்போதும், துன்பத்தை வெளிப்படுத்தும்போதும் (அதன்) தாய் எந்த அளவுக்கு நிம்மதியிழந்து அதற்கு பாலூட்டுகின்றாள். இறைவனின் அருள் மற்றும் கருணை எனும் பாலும் கூட ஒரு அழுகையை விரும்புகின்றது. எனவே அவனது சந்நிதானத்தில் அழக்கூடிய கண்களை முன் வைக்க வேண்டும் (அழ வேண்டும்)**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### தொழுகையின் அசல் நோக்கமும், சாறும் துஆ ஆகும்

தொழுகையின் அசல் நோக்கமும், சாறும் துஆ ஆகும். மேலும் துஆ இறைவனின் இயற்கை சட்டத்திற்கு ஏற்புடையதாகும். பொதுவாக பாருங்கள்! குழந்தை அழுது புலம்பும்போதும், துன்பத்தை வெளிப்படுத்தும்போதும் (அதன்) தாய் எந்த அளவுக்கு நிம்மதியிழந்து அதற்கு பாலூட்டுகின்றாள்!

இறைவனுக்கும், அடியாருக்கும் இடையில் இதுபோன்ற வகையிலான ஒரு தொடர்பு உள்ளது. இதனை எல்லா மனிதராலும் புரிந்து கொள்ள முடியாது. மனிதன் இறைவனின் சந்நிதானத்தில் விழுகின்றபோது, மிகவும் பணிவுடனும், உருக்கத்துடனும் மன்றாடி தனது நிலையை எடுத்து வைத்து அவனிடத்தில் தனது தேவையை வேண்டும்போது இறைவனின் கருணை பொங்கி எழுகின்றது. மேலும் அந்த நபர் மீது கருணை காட்டப்படுகின்றது.

### மன்றாடுதல்

இறைவனின் அருள் மற்றும் கருணை எனும் பாலும் கூட ஓர் அழுகையை விரும்புகின்றது. எனவே அவனது சந்நிதானத்தில் அழக்கூடிய கண்களை முன் வைக்க வேண்டும். இறைவனின் சந்நிதானத்தில் அழுது புலம்புவதால் ஒன்றும் கிடைக்காது என்று கூறுவதும், எண்ணுவதும் தவறாகும். மேலும் அது

*(தொடர்ச்சி 2 வது பக்கம்...)*

## நபிமொழி

1427: ஹஸ்ரத் ஹகீம் பின் ஹிஸாம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

உயர்ந்த (கொடுக்கும்) கை தாழ்ந்த (வாங்கும்) கையை விடச் சிறந்தது ஆகும். உங்களின் பராமரிப்பின் கீழ் இருப்பவர்களுக்கு முதலில் கொடுங்கள். தேவையை முழுமை செய்த பிறகு கொடுப்பதே சிறந்த தருமமாகும். எவர் கேட்பதிலிருந்து தப்பித்துக் கொள்கிறாரோ அவரை அதிலிருந்து அல்லாஹ்வும் பாதுகாக்கின்றான். யார் தன்னைப் பிறரிடமிருந்து தேவையற்றவனாக ஆக்கிக் கொள்ள (அல்லாஹ்விடம்) வேண்டுவாரோ அல்லாஹ் அவரை பிறரிடம் தேவையற்றவனாக ஆக்கி விடுவான்.

(சஹீஹுல் புகாரி தொகுதி 3, கிதாபுஸ் ஸகாத் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**பொதுவாக இல்ஹாம் வந்து விட்டால் நாம் பெரிய மனிதராகி விட்டோம் என்று மக்கள் கருதுகின்றனர். ஆனால் இது போதுமானதல்ல**

**வெறும் இல்ஹாம் மட்டும் பார்க்கப்படாது. அந்த இல்ஹாமில் அல்லாஹ்வின் புறமிருந்து அன்பின் வெளிப்பாடு ஏதும் உள்ளதா? அல்லது அந்த அடியாரின் கண்ணியத்தின் வெளிப்பாட்டிற்கும் வடிவம் ஏதும் உள்ளதா? என்றும் பார்க்கப்படும்.**

مَا نُنَزِّلُ الْمَلٰٓئِكَةَ اِلَّا بِالْحَقِّ وَمَا كَانُوْٓا اِذًا مُّنْظَرِيْنَ

பொருள்: வானவர்களை நாம் உண்மையுடனே இறக்குகின்றோம் என்பது அவர்களுக்கு தெரியாதா? மேலும் அந்த நேரத்தில் நிராகரிப்பவர்களாகிய அவர்களுக்கு காலக்கெடு அளிக்கப்படுவதில்லை. (15:9) .

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹக் என்பதன் பொருள் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இந்த இடத்தில் அதன் பொருள் உண்மையான கூற்று என்பதாகும். பொருள் என்னவென்றால், வானவர்கள் உண்மையான வேதத்துடன் இறங்குகின்றனர். ஆனால் உங்கள் மீது வானவர்கள் இறங்குவதற்கு நீங்கள் தூதரும் இல்லை. மேலும் இறைகூற்றுகள் உங்களுக்கு வழங்கப்படுவதற்கு நீங்கள் தகுதியானவர்களும் இல்லை. இந்த இடத்தில் ‘ஹக்’ என்பதற்கு இஸ்திஹாக் (தகுதி) என்ற பொருளும் உள்ளது. அதாவது ஒருவர் எந்த அளவிற்கு தகுதி படைத்தவராக இருப்பாரோ அதற்கேற்ப வானவர்கள் இறங்குகின்றனர். அல்லாஹ்வின் நபிமார்கள் மற்றும் நம்பிக்கையாளர்களிடத்தில் அவர்களின் தகுதிக்கேற்ப வானவர்கள் இறங்குகின்றனர்.

ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறங்குகின்ற வானவர்கள் ரஹ்மத்தின் (கருணையின்) வானவர்கள் ஆவர். அவர்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு மட்டுமே

*(தொடர்ச்சி 2 வது பக்கம்...)*

## இந்த இதழில்

*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*குத்பா பேருரை 06 ஆகஸ்ட் 2021 (முழுவதுமாக)*

*ஹுஸூர் (அய்ய) அவர்களின் ஆஸ்திரேலியா சுற்றுப்பயணம் (அறிக்கை)*

*கேள்வி – பதில்*

*ஹுஸூர் அவர்களுடன் காணொளி சந்திப்பு (Virtual Meeting)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

(திருக்குர்ஆன் விளக்கவுரை... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

தென்படுகின்றனர். இறைவனுடைய கோபத்திற்கு ஆளானவர்களுக்கு அவர்கள் எவ்வாறு தென்படுவார்கள்? அவர்களிடம் (நிராகரிப்பாளர்களிடம்) தண்டனைகள் வானவர்களே இறங்குவார்கள். அந்த நேரத்தில் வானவர்களை பார்ப்பது அவர்களுக்கு பயன்தராது. ஏனென்றால் அவர்கள் அவர்களை அழிப்பதற்காக வருவார்கள். அவர்கள் வந்த பிறகு நிராகரிப்பின் தலைவர்களுக்கு காலக்கெடு கிடைக்காது. எனவே பதர் போர் சந்தர்ப்பத்தில் தண்டனை அளிக்கக்கூடிய அந்த வானவர்கள் வந்தனர். சில நிராகரிப்பாளர்களுக்கு ஆன்மீக காட்சியின் நிலைகளில் அவர்கள் தென்படவும் செய்தனர். ஆனால் அந்த நேரம் அவர்களின் அழிவிற்கான நேரமாக இருந்தது. எனவே அப்போது அவர்களால் பயன்பெற முடியாமல் போனது.

இந்த இடத்தில் ஒரு மாபெரும் கருத்து கூறப்பட்டுள்ளது. அது என்னவென்றால், வானவர்களின் கூற்று மனித உள்ளத்திற்கு ஏற்ப அமைகின்றது. எப்படிப்பட்ட மனிதனாக இருப்பானோ அப்படிப்பட்ட இல்ஹாம்களே அவனுக்கு இறங்கும். பொதுவாக இல்ஹாம் வந்து விட்டால் நாம் பெரிய மனிதராகி விட்டோம் என்று மக்கள் கருதுகின்றனர். ஆனால் இது போதுமானதல்ல.

ஒரு மலைவாழ் மனிதர் வேலை வாய்ப்பிற்காக காதியான் வந்திருந்தார். பொதுவாக அவர் எங்களது வீட்டிலேயே வேலை செய்து வந்தார். சில நேரத்தில் வேறு பணிக்காக ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்தல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் சென்று வருவார். அப்போது முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அவரிடம் தொழும்படி வலியுறுத்தி வந்தார்கள். அதற்கு அவர் எனது சூழ்நிலைக்கேற்ப தொழுகை இல்லை என்று பதிலளித்தார்.

தற்செயலாக ஒரு நாள் அன்னார் அவரை பள்ளிவாசலில் தொழும்போது பார்த்து விட்டார்கள். தொழுது முடித்த பிறகு என்ன விஷயம்? என்று கேட்டார்கள். அப்போது அவர் பன்றியே! எழு. பன்றியே! எழுந்து தொழு! என்று எனக்கு இல்ஹாம் வந்தது என்று கூறினார்.

இந்த இல்ஹாம் ஷய்த்தான் தரப்பிலிருந்து வந்திருக்க முடியாது என்பது வெளிப்படையாகும். நிச்சயமாக இது இறை இல்ஹாமாக இருந்தது. ஆனால் அவரது தரத்திற்கேற்ப இருந்தது.

வெறும் இல்ஹாம் மட்டும் பார்க்கப்படாது. அந்த இல்ஹாமில் அல்லாஹ்வின் புறமிருந்து அன்பின் என்ன வெளிப்பாடு உள்ளது? அல்லது அந்த அடியாரின் கண்ணியத்தின் வெளிப்பாட்டிற்கும் ஏதும் வடிவம் உள்ளதா? என்றும் பார்க்கப்படும்.

இந்த வசனத்திலிருந்து ஒரு பொதுவான சட்டம் தெரிய வருகின்றது. அது என்னவென்றால், வானவர்கள் உண்மையுடன் இறங்குகின்றனர். நம்பிக்கையாளர்களில் குறைந்த, உயர் தரமான மற்றும் இறைவனால் அனுப்பப்பட்ட அல்லது அனுப்பப்படாத அனைவரும் அதில் அடங்குவர் என்பது வெளிப்படையாகும். இதேபோன்று நபிமார்களின் அந்தஸ்துகளிலும் படித்தரங்கள் உள்ளன. எவ்வாறு ஸகரிய்யா, இல்யாஸ் மற்றும் யூசுஃப் (அலை) ஆகியோர் நபி என்று அழைக்கப்படுகின்றார்களோ அதுபோன்றே ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்களும் நபி என்று அழைக்கப்படுகின்றார்கள்.

எனவே எவ்வாறு அந்தஸ்துகளில் பெயர் இடம் பெறுவதால் அனைவரையும் அது சமமானவர்களாக ஆக்கி விடுவதில்லையோ அதேபோன்று அனைவரின் வஹீயும் வஹீ என்று கூறப்படுவதால் (அனைத்தும்) ஒன்றுபோல் ஆகிவிடாது. ஒவ்வொரு நபிக்கும் அவரது அந்தஸ்திற்கேற்ப இறைக்கூற்று இறங்குகின்றது.

இந்த அசல் விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அந்நிலையில் தவ்ராத், இஞ்ஜீல், சபூர் போன்ற வேதங்கள் திருக்குர்ஆனைப் போன்று தன்னிகரற்ற வேதமாக ஏன் இல்லை? என்ற கேள்விக்குரிய பதில் கிடைத்து விடும். எந்த நபிமார்களின் மீது அந்த வேதம் இறங்கியதோ அவர்களின் தகுதிக்கேற்ப அவர்களிடம் இறைவன் பரக்கத் செய்திருந்தான். அல்லாஹ் பல்வேறு அந்தஸ்துகளை கொண்ட பணிகளை பல்வேறு நபிமார்களிடம் ஒப்படைத்துவிட்டு அனைவருக்கும் ஒரே வகையான பொருட்களை கொடுப்பது எவ்வாறு சாத்தியமாகும்? எவ்வாறிருப்பினும் பணிகளுக்கேற்பவே அவன் பொருட்களை வழங்குகின்றான். பணிகளுக்கேற்பவே அவன் ஊழியர்களை நியமிக்கின்றான்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 5 பக்கம் 13 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

பொய் ஆகும். அதுபோன்ற மக்கள் அல்லாஹ்வினுடைய இருப்பு, அவனது பண்புகள் மற்றும் வல்லமைகளின் மீது நம்பிக்கை கொள்வதில்லை. உண்மையான ஈமானை உருவாக்கிக் கொண்டால் அதுபோன்று ஒருபோதும் அவர்கள் கூற மாட்டார்கள். இறைவனின் சந்நிதானத்தில் ஒரு நபர் செல்லும்போதும் உண்மையான தவ்பாவுடன் அவன் பக்கம் முகம் குனியும்போதும் இறைவன் அந்த நபர் மீது தனது அருளை அவன் பொழிகின்றான்.

ஒருவரின் இந்தக்கூற்று முற்றிலும் உண்மையாகும்.

عاشق کہ شد کہ یار بحالش نظر نہ کرد    اے خواجہ درد نیست وگرنہ طبیب ہست

பொருள்: இறைவன் மீது அன்பு கொண்ட எந்த இறைநேசரின் நிலையின் மீது இறைவன் கவனம் செலுத்தவில்லை. அன்பரே! மருந்து உள்ளது. ஆனால் வலி தான் இல்லை.

நீங்கள் அவனிடத்தில் தூய உள்ளத்துடன் வர வேண்டும் என்று இறைவன் விரும்புகின்றான். அதற்கேற்ப உங்களது நிலையை ஆக்கிக் கொள்ள வேண்டும். மேலும் உண்மையான மாறுதல்களை (உங்களிடம்) ஏற்டுத்திக் கொள்ள வேண்டும் என்பது மட்டுமே அதற்கான நிபந்தனை ஆகும். இறைவனிடத்தில் விநோதமான வல்லமைகள் உள்ளன. அவனிடத்தில் எல்லையற்ற அருட்களும், பரக்கத்துகளும் உள்ளன. ஆனால் அவற்றை காண்பதற்கும், பெற்றுக் கொள்வதற்கும் அன்பின் கண்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். உண்மையான அன்பு இருக்குமென்றால் பின்னர் இறைவன் துஆக்களை அதிகமாக கேட்கின்றான். மேலும் உதவி செய்கின்றான். ஆனால் இறைவனிடத்தில் அன்பும், கலப்பற்ற தன்மையும் இருக்க வேண்டும் என்பதே நிபந்தனையாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 320 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## 126 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் 126 வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்த டிசம்பர் 24, 25, 26 (வெள்ளி, சனி, ஞாயிறு) 2021 ஆகிய தேதிகளுக்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் துஆக்களுடன் இப்போதிருந்தே ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு நிய்யத் வைத்து தயாரிப்புகளை தொடங்கி விடுங்கள். இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும், அருளுக்குரியதாகவும் நடைபெறவும், நல்லுள்ளங்களின் நேர்வழிக்கு காரணியாக அமையவும் தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)

O.A. NIJAM 99947 57172    V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

# ஜுமுஆ பேருரை

**ஜல்ஸா சாலானா பிரிட்டன் – 2021 ஆம் ஆண்டின் சந்தர்ப்பத்தின்போது விருந்தினரும், விருந்து உபசரிப்பவரும் தமது கடமைகளை ஆற்றுவது மற்றும் சில நிர்வாக விவகாரங்கள் தொடர்பாக பொன்னான அறிவுரைகள்**

**இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தான் உயர் நல்லொழுக்கத்தை நிலைநாட்ட வேண்டியதிருந்தது. இஸ்லாத்தின் அழகிய சித்திரம் நம்முன் நிலைநாட்டும் அளவிலும் நாம் அதனை உலகிற்கு முன் நிறுத்துவதற்காகவும் அன்னார் (அலை) அவர்கள் உயர் நல்லொழுக்கங்களை நிலைநாட்டியுள்ளார்கள்**

**நம்பிக்கையாளர் விருந்தினரை கண்ணிப்படுத்துகின்றார். இது ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்**

**விருந்தினர்களும் இந்த விஷயத்தை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். இஸ்லாம் விருந்து உபசரிப்பவருக்கு விருந்தினரை கண்ணியப்படுத்துவதற்கு எங்கு வழிகாட்டியுள்ளதோ அங்கு விருந்தினர்களுக்கும் கவனமூட்டியுள்ளது**

**நான் இதையே விரும்புகின்றேன். அதாவது என்ன பணி செய்தாலும் அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டும். என்ன விஷயத்தை கூறினாலும் அது இறைவனுக்காக இருக்க வேண்டும். எனது இயல்பின் தேட்டம் இதுவாகவே உள்ளது**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 06 ஆகஸ்ட் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **06 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

இன்ஷா அல்லாஹ் இன்று பிரிட்டனின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகின்றது. ஜல்ஸா எல்லா வகையிலும் அருளுக்குரியதாக நடைபெற இந்த நாட்களில் மிக அதிகமாக துஆ செய்யுங்கள் என்று நான் முதன் முதலில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அல்லாஹ் இந்நாட்களில் சிறப்பான ஆன்மீக சூழல்களில் நம்மை வைப்பானாக. கலந்து கொள்பவர்களின் உள்ளங்களில் நன்மையையும், இறையச்சத்தையும் அதிகரிப்பானாக. ஒரு வகையில் இன்றைய நாட்களில் பரவியுள்ள தொற்றின் காரணமாக இங்கு கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை மிகவும் ஓர் எல்லைக்குட்பட்டதாக இருக்கின்றது. ஆனால் வீடுகளிலும் பார்க்கப்படுகின்றது. மேலும் சில இடங்களில் ஜமாஅத் அளவிலான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் பள்ளிவாசல்களில் அல்லது எங்கு ஹால் அமைந்துள்ளதோ அங்கு ஜல்ஸா பார்க்கப்படுகிறது என்றும் எனக்கு கூறப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் ஒரு வகையில் அவர்களும் மாநாட்டுத் திடலிலேயே இருக்கின்றார்கள். இவ்வாறு ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்கள் அனைவரும் இந்த எண்ணத்துடன் ஜல்ஸாவில் கலந்து கொள்ளட்டும். மேலும் மூன்று நாட்களின் நிகழ்ச்சிகளை அவர்கள் கேட்க வேண்டும். மேலும் இந்நாட்களை துஆக்களில் கழிக்க வேண்டும்.

இந்த வருடம் இவ்வாறு ஜல்ஸா நடத்துவது மாநாட்டு அமைப்பாளர்களுக்கு ஒரு புதிய அனுபவம் ஆகும். கலந்து கொள்பவர்களுக்கும் ஒரு புதிய அனுபவம் ஆகும். அமைப்பாளர்கள் சார்பாக விருந்தினர்களின் ஓய்விற்காக ஏற்பாடு செய்யப்பட்டு வந்த சில வசதிகள் இந்த வருடம் ஏற்படுத்திக் கொடுக்க முடியாது. ஏற்பாடு செய்து விடலாம் என்ற எண்ணத்தில் இருந்தார்கள். ஆனால் ஏற்பாடாகவில்லை. எனவே விருந்தினர்களும் அல்லது ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களும் இந்த சூழல்களைப் புரிந்தவாறு எந்தத் துறைகளிளெல்லாம் மாநாட்டு ஏற்பாட்டாளர்களிடம் ஏற்பாடுகளில் குறைவு ஏற்பட்டு விட்டதோ அதனை புறந்தள்ளுங்கள். மேலும் அல்லாஹ் விரைவாக சூழலை சிறந்ததாக ஆக்குவதற்கு துஆ செய்யுங்கள். மேலும் ஜல்ஸா தனது முந்தைய பொலிவுடன் மீண்டும் நடைபெறவும் துஆ செய்யுங்கள்.

எங்களை ஜல்ஸாவில் சில நிபந்தனைகளின் காரணமாக கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை அல்லது சில இடங்களில் கலந்து கொள்பவர்களுக்காக நடத்தப்பட்ட அந்த தேர்வு சரியல்ல என்று சில மக்களுக்கு முறையீடுகள் உள்ளன. எவ்வாறிருப்பினும் இவ்விவகாரத்தில் மாநாட்டு நிர்வாகம் தனது சாக்குப்போக்குகளை முன் வைக்கின்றது. அதாவது சில உள்ளூர் ஜமாஅத்தின் நிர்வாகம் இந்த சாக்குப்போக்குகளை கூறுகின்றது. அந்த காரணங்கள் சரியானதா? அல்லது தவறானதா? என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். நான் ஜமாஅத் உறுப்பினர்களிடம் கூறுவேன். இங்கும் நீங்கள் கண்டும் காணாமல் நடந்து கொள்ளுங்கள். முதல் அனுபவத்தின் காரணமாக சில தவறுகள் ஏற்பட்டிருக்கக்கூடும் என்று புரிந்து கொள்ளுங்கள். எனவே மன்னித்து விடுங்கள். எந்த வகையான காழ்ப்புணர்ச்சியும் உள்ளத்தில் வைக்க வேண்டாம்.

இந்த விஷயத்திற்குப் பிறகு ஜல்ஸா மற்றும் விருந்து உபசரிப்பு தொடர்பாக சில விஷயங்களை நான் கூறுவேன். பொதுவாக நான் ஜல்ஸா நாளன்று குத்பாவில் விருந்தினர்களுக்கு அவர்களின் பொறுப்புகளைக் குறித்து கவனமூட்டுவேன். அல்லது சில நிர்வாக விஷயங்களை கூறுவேன். மேலும் ஜல்ஸாவிற்கு முந்தைய குத்பாவில் விருந்து உபசரிப்பாளர்களுக்கும், தன்னார்வத் தொண்டர்களுக்கும் அவர்களின் பொறுப்புகளைக் குறித்து சில விஷயங்களை கூறுவேன். ஆனால் இந்த முறை டியூட்டி கொடுப்பவர்களின் கடமைகள் குறித்து இதற்கு முன்னர் நான் எதுவும் கூறவில்லை. எனவே இன்று நான் இந்த இரண்டு தரப்பிற்கும் சில விஷயங்களை கூறுவேன்.

முதலாவதாக நான் விருந்து உபசரிப்பாளர்களுக்கு இதனை கூற விரும்புகின்றேன். தன்னார்வத் தொண்டர்களிடமும் நான் இதனைக் கூற விரும்புகின்றேன். அதாவது சூழ்நிலையின் காரணமாக விருந்து உபசரிப்பில் எந்தக் குறைவும் இருக்கக்கூடாது. வெளிநாடுகளிலிருந்து வருகை தந்து வந்த ஆறாயிரம், ஏழாயிரம் விருந்தினர்கள் இந்த முறை வரவில்லை. நாட்டிற்குள்ளிருந்தே பல்வேறு நகரங்களிலிருந்து வரக்கூடிய விருந்தினர்கள் வருவார்கள். அதுவும் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே வருகின்றார்கள். எனவே இதனை எளிதாக கருதி Relax ஆகி விட வேண்டாம். எங்கேயாவது ஏதாவது குறைவு ஏற்பட்டு விட்டால் பின்னர் அருகிலிருந்து வரக்கூடிய விருந்தினர்களுக்கும், தொடர்பிலுள்ள மக்களுக்கும் அதிகமான முறையீடுகள் உருவாகி விடும். எனவே மிகவும் எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் ஒவ்வொருவருக்கும் விருந்து உபசரிப்பு செய்யுங்கள். எந்த வகையான குறைவும் இருக்கக் கூடாது.

அல்லாஹ்வின் அருளால் பிரிட்டன் ஜல்ஸாவின் ஊழியர்களைப் பொறுத்தவரை, நேற்று நான் ஊழியர்களின் Inspection நிகழ்ச்சியின்போது கூறியிருந்ததுபோன்று ஒவ்வொரு துறையின் ஊழியர்களும், நாஸிராத்களும், லஜ்னா உறுப்பினர்களும், அத்ஃபால் உறுப்பினர்களும், குத்தாம் உறுப்பினர்களும், அன்ஸார் உறுப்பினர்களும் தத்தமது டியூட்டிகளிலும் பணிகளிலும் மிகவும் புலமைப் பெற்று விட்டனர். மேலும் பெரும் பணிகளை சமாளிப்பதற்குரிய ஆற்றலைப் பெற்றுள்ளனர். புதிதாக கலந்து கொள்ளக்கூடிய ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்கும் நல்ல முறையில்

பணிகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. எனவே இந்த அடிப்படையில் பணி செய்யத் தெரியாது என்று எந்த கவலையும் இல்லை. ஜல்ஸாவின் ஒவ்வொரு துறையிலும் மிகவும் ஆழமாக பார்க்கக்கூடிய மற்றும் பணி செய்யக்கூடிய ஊழியர்கள் உள்ளனர். ஆனால் நம்பிக்கையாளர்களுக்கு நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற அல்லாஹ்வின் கட்டளையும் உள்ளது. இது மிகவும் பயனுள்ளதாகும்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று ஜல்ஸாவின் ஏற்பாடுகள் மிகக் குறுகியதாகும். சில முறை தேவைக்கு அதிகமாக நம்பிக்கை கொள்ளப்படுகின்றது. அதாவது இந்த ஜல்ஸா சிறிய அளவிலான உறுப்பினர்களைக் கொண்டு நடைபெறுகிறது. எனவே இதை நாம் சமாளித்து விடுவோம் என்றும் நம்புகின்றனர். சில முறை சில விவகாரங்களில் கவனக்குறைவின் காரணமாக குறைவு ஏற்பட்டு விடுகின்றது. மேலும் சீர்கேடுகள் உருவாகி விடுகின்றன. மேலும் டியூட்டியில் புதிதாக பங்கு பெறக்கூடியவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் இதிலிருந்து தவறான செய்தியை பெற்றுக் கொள்கின்றனர். எனவே விருந்தினர்களின் ஓய்விற்காகவும் புதிதாக வரக்கூடியவர்களுக்கு கற்றுக் கொடுப்பதற்கும் இது அவசியமான விஷயமாகும். அதாவது ஏற்பாடு பெரும் அளவில் இல்லையென்றாலும் கூட ஒவ்வொரு துறையும், ஒவ்வொரு பணியும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மேலும் குறிப்பாக தற்போதைய கால நிலையும் மிகவும் மோசமாக உள்ளது. இந்த அடிப்படையிலும் அதிகமாக கவனம் செலுத்துவதற்கு சில துறைகளுக்கு அவசியம் உள்ளது.

டியூட்டி கொடுக்கக்கூடிய ஒவ்வொருவரும் இதனை கருத்திற் கொள்ள வேண்டும். விருந்தினர்கள் குறைவாக இருந்தாலும் அல்லது அதிகமாக இருந்தாலும் ஜல்ஸாவிற்கு வரக்கூடியவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்கள் ஆவர். இயன்ற அளவிற்கு அவர்களுக்கு நாம் முழுமையாக தொண்டாற்ற வேண்டும். விருந்து உபசரிப்பு எப்படிப்பட்ட ஒரு நல்லொழுக்கம் என்றால் அது நபிமார்கள் மற்றும் அவர்களின் ஜமாஅத்துகளின் ஒரு சிறப்புப் பண்பாகும். எனவே மார்க்க ஜமாஅத் என்ற அடிப்படையில் நமது கடமை என்னவென்றால், நம்மிடம் விருந்து உபசரிப்பு என்ற பண்பு ஒரு சிறப்பான வடிவம் கொண்டிருக்க வேண்டும். மேலும் இந்தப் பண்பு மிகப்பெரும் அளவில் இருக்க வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் விருந்தினர்கள் வரத் தொடங்கிவிட்டபோது அவர்களை சஹாபிகளுக்கு மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டார்கள். சஹாபிகள் மிக மகிழ்ச்சியுடன் விருந்தினர்களை தம்முடன் அழைத்துச் சென்று வந்தனர். காலை விடிந்ததும் விருந்தினர்களிடம் இரவு கழிந்தது குறித்தும், சஹாபிகளின் விருந்து உபசரிப்பு குறித்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டறிந்து வந்தார்கள். நிலவரங்களை விசாரித்து வந்தார்கள். தொண்டின் நிலைகளை கேட்டறிந்து வந்தார்கள். அப்போது இதுபோன்று தொண்டாற்றக்கூடிய விருந்து உபசரிப்பாளர்களை நாங்கள் கண்டதே இல்லை. அவர்கள் தமது கடமையை ஆற்றி விட்டனர் என்பதே ஒவ்வொரு நபரின் பதிலாக இருந்து வந்தது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 357 ஹதீஸ் எண் 15644 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எனவே இது முன்னுதாரணமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய தர்பிய்யத்தின் காரணமாக சஹாபிகள் நம்முன் நமக்காக இந்த முன்மாதிரிகளை நிலைநாட்டியுள்ளனர். இக்காலத்தில் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஒப்புக் கொண்டுள்ளோம். எனவே அன்னார் (அலை) அவர்களும் இந்த முன்மாதிரியின் வழியில் நடப்பதற்கு நமக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். எந்த முன்மாதிரிகளை சஹாபிகள் நிலைநாட்டியுள்ளார்களோ அதன்படி நடப்பதற்கு நமக்கு அன்னார் அறிவுறுத்தியுள்ளார்கள்?

ஒரு சந்தர்ப்பத்தில் தனது ஒரு உறுப்பினருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அறிவுரை செய்தவாறு இவ்வாறு கூறினார்கள்: எனது வழிமுறையின்படி ஒரு விருந்தினரிடம் ஏச்சுப் பேச்சுக்களை கேட்கும் நிலைமை ஏற்பட்டு விட்டாலும் அதாவது விருந்தினர் ஒருவேளை கடுமையான சொற்களை பயன்படுத்தினாலும் கூட அவருடன் கடுமையாக நடந்து கொள்ளக்கூடாது. அவரின் நடைமுறை சரியாக இல்லையென்றாலும் கூட அந்நிலையிலும் அதனைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 91)

ஒரு வகையில் இங்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்நிய விருந்தினர்கள் குறித்து இந்த அறிவுரையை செய்துள்ளார்கள். ஆனால் நாம் நினைவிற் கொள்ள வேண்டும். விருந்தினர் யாராகவும் இருக்கட்டும். அஹ்மதி விருந்தினராகவும் இருக்கட்டும். அப்போதும் கூட விருந்து உபரிசப்பு செய்கின்ற ஒருவரின் பணி என்னவென்றால், அவர் உயர் நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். கடுமையான நடவடிக்கைக்கு பதிலாக கடுமையாக நடந்து கொள்ளக்கூடாது.

நம்மவராக இருக்கட்டும். அல்லது அந்நிய விருந்தினராக இருக்கட்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்து உபசரிப்பில் அசாதாரண முன்னுதாரணங்கள் நமக்கு கிடைக்கின்றன. நம்மவர்களிடமும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அசாதாரண விருந்து உபசரிப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள். அவ்வாறு வெளிப்படுத்தாமல் எவ்வாறு இருக்க முடியும்? இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தான் உயர் நல்லொழுக்கத்தை நிலைநாட்ட வேண்டியதிருந்தது. இஸ்லாத்தின் அழகிய சித்திரம் நம்முன் நிலைநாட்டும் அளவிலும் நாம் அதனை உலகிற்கு முன் நிறுத்துவதற்காகவும் அன்னார் (அலை) அவர்கள் உயர் நல்லொழுக்கங்களை நிலைநாட்டியுள்ளார்கள்.

ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஒரு முறை லாஹூரிலிருந்து காதியான் வந்தேன். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் மஸ்ஜிது முபாரக்கில் என்னை அமரச் செய்தார்கள். அந்த நேரம் வரை அந்த இடம் ஒரு சிறிய இடமாக இருந்தது. இப்போதும் கூட சிறிய பள்ளிவாசலாக உள்ளது. ஆனால் அந்த நேரத்தில் இன்னும் சிறியதாகவே இருந்தது. ஒரு அறை அளவில் அந்த பள்ளிவாசல் இருந்தது.

தொடர்ந்து அன்னார் கூறினார்கள்: நான் அமர்ந்து கொண்டேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: நான் உங்களுக்காக உணவு கொண்டு வருகின்றேன். இவ்வாறு கூறிவிட்டு அன்னார் (அலை) அவர்கள் உள்ளே சென்று விட்டார்கள். முஃப்தி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: யாராவது ஓர் ஊழியரின் மூலமாக உணவைக் கொடுத்து அனுப்புவார்கள் என்பதே எனது எண்ணமாக இருந்தது. ஆனால் சில நிமிடங்களுக்குப் பிறகு ஜன்னல் திறந்தபோது நான் கண்ட காட்சி என்னவென்றால், அன்னார் (அலை) அவர்கள் அதனை (உணவை) தனது கரத்தால் எடுத்துக் கொண்டு வந்தார்கள். எனக்காக உணவு கொண்டு வந்திருந்தார்கள். ஒரு தட்டில் உணவை வைத்து எனக்காக எடுத்து வந்தார்கள். மேலும் நீங்கள் உணவு உண்ணுங்கள். நான் தண்ணீர் கொண்டு வருகின்றேன் என்று என்னைப் பார்த்து கூறினார்கள்.

முஃப்தி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நமது இமாமும், தலைவரும் நமக்கு இவ்வாறு தொண்டு செய்கின்றார்கள் என்றால் நாம் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு எந்த அளவிற்கு தொண்டாற்ற வேண்டும் என்ற எல்லையற்ற உருக்கத்தின் காரணமாக எனது கண்களிலிருந்து கண்ணீர் வந்து விட்டது.

(ஹஸ்ரத் முஃப்தி முஹம்மது சாதிக் சாஹிப (ரலி) அவர்கள் எழுதிய ஸிக்ரே ஹபீப் என்ற நூல் பக்கம் 327 – காதியானில் அச்சிடப்பட்டது)

ஒரு முறை மெத்தைகள் குறைவாகி விட்டன. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது மெத்தையை விருந்தினர்களுக்காக கொடுத்து விட்டார்கள். இன்னும் கூறப்போனால் வீட்டிலிருந்த அனைத்து மெத்தைகளையும் கொடுத்து விட்டார்கள். மேலும் தான் சுயமே மெத்தையின்றி கஷ்டத்துடன் இரவைக் கழித்தார்கள். தனக்கு கஷ்டம் ஏற்பட்டது என்று எவரையும் உணரச் செய்யவில்லை.

(அஸ்ஹாபே அஹ்மது, தொகதி 4 பக்கம் 180, அறிவிப்பு எண். 76 – ரப்வாவில் அச்சிடப்பட்டது)

இதுவே விருந்தினர்களுக்காக செய்யப்படுகின்ற அசல் தியாகம் ஆகும். சில முறை சில மக்கள் தியாகம் செய்கின்றனர். ஆனால் அதனை அவர்கள் வெளிப்படுத்தியும் விடுகின்றனர். இந்த தியாகத்தின் காரணமாக எனக்கு இவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டன என்று அவர்கள் உணர்த்தி விடுகின்றனர்.

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: எந்த விருந்தினருக்கும் கஷ்டம் ஏற்படக்கூடாது என்பதே எப்போதும் எனது

எண்ணமாக இருக்கின்றது. எந்த அளவிற்கு முடியுமோ விருந்தினர்களுக்கு ஓய்வை வழங்குங்கள் என்று நான் எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளேன். விருந்தினரின் உள்ளம் கண்ணாடியைப் போன்று மென்மையானதாகும். சிறிது பாதிப்பு ஏற்பட்டாலும் அது உடைந்து விடும்.

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நானும் விருந்தினர்களை சந்திக்கும்போது எப்படிப்பட்ட விருந்து உபசரிப்பு நடைபெறுகின்றது? உணவு போதுமானதாக இருக்கின்றதா? எவ்வளவு கொடுக்கப்படுகின்றது? எல்லாருக்கும் கிடைத்து விடுகின்றதா? என்பதெல்லாம் தெரிந்து விடுகின்றது. ஆனால் நோயின் காரணமாக நான் தனியாக உணவு உண்ண நேரிட்டபோது அந்த ஏற்பாடு அமையவில்லை. அத்துடன் இன்னொரு காரணமும் உருவாகி விட்டது. விருந்தினர்கள் எந்த அளவிற்கு பெரும் எண்ணிக்கையில் வந்து விட்டனர் என்றால் இடம் போதுமானதாக அமையவில்லை. ஒரிடத்தில் அமர்ந்து அனைவருக்கும் உணவு வழங்குவது மிகக் கடினமானதாக ஆகிவிட்டது.

பல்வேறு இடங்களில் விருந்து வழங்கப்பட்டிருக்கும். அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையில் உணவு வழங்கப்பட்டிருக்கும். எனவே நிர்ப்பந்தத்தின் காரணமாக தனித்திருப்பார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 406)

அடுத்து அன்னார் (அலை) அவர்கள் விருந்தினர் இல்லத்தின் அதிகாரியிடம் ஒரு முறை அதிகமான விருந்தினர்கள் வந்திருந்தபோது இவ்வாறு கூறினார்கள்: பாருங்கள்! ஏராளமான விருந்தினர்கள் வந்துள்ளனர். அவர்களில் சிலரை நீங்கள் அடையாளம் கண்டு கொள்கின்றீர்கள். சிலரை அடையாளம் காண்பதில்லை. எனவே அனைவரையும் கண்ணியத்திற்குரியவராக கருதி சேவை செய்யுங்கள். இதுவே உகந்ததாகும். விருந்து உபசரிப்பவருக்கு அனைத்து விருந்தினர்களும் விருந்தினர்களே ஆவர். எவரிடமும் எந்த வித்தியாசத்துடனும் நடந்து கொள்ள வேண்டாம். அதாவது இவர் பொறுப்பாளர். இவர் எனக்கு அறிந்தவர் (என்ற எண்ணம்) என்பது கூடாது. அதிகம் தொண்டாற்றுங்கள். இதை விட அதிகமாக நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அனைவரையும் விருந்தினராக கருதி சமமாக தொண்டாற்றுங்கள். ஒவ்வொரு விருந்தினரிடமும் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும். இதுவே விருந்து உபசரிப்பின் ஆணி வேர் ஆகும்.

நீங்கள் விருந்தினர்களுக்கு சேவையாற்றுகின்றீர்கள் என்றும், அவர்கள் அனைவருக்கும் சிறப்பாக தொண்டாற்றுகின்றீர்கள் என்றும் நான் உங்களைக் குறித்து நல்லெண்ணம் கொள்கின்றேன் என்று அன்னார் அவர்களிடம் கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 226)

எனவே இன்றும் தொண்டாற்றக்கூடிய அனைவரின் மீதும் இந்த நல்லெண்ணம் வைக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் பெரும்பாலான தொண்டாற்றக்கூடியவர்கள் இந்த நல்லெண்ணத்தை முழுமை செய்யக்கூடியவர்களாக இருக்கின்றனர். எவர்களிடத்தில் குறைவு உள்ளதோ அவர்கள் சுயமே தம்மை ஆய்வு செய்து கொள்ளட்டும். மேலும் எவ்வாறு தமது குறையை நீக்கிக் கொள்ளலாம். மேலும் குறையை நீக்கிக் கொண்டு விருந்து உபசரிப்பின் உயர் தரத்தை எவ்வாறு அதிகரித்துக் கொள்ளலாம்? என அவர்கள் பார்க்க வேண்டும்.

நான் அறிவேன். சில துறைகளைச் சார்ந்த ஊழியர்களுக்கு சில விருந்தினர்கள் புறமிருந்து கஷ்டங்களை சந்திக்க நேரிடுகிறது. ஆனால் நமது பணி என்னவென்றால், ஒருபோதும் நல்லொழுக்கத்தை கைவிட்டு விடக்கூடாது. நாம் நமது உயர் நல்லொழுக்கத்தையே வெளிப்படுத்த வேண்டும். விருந்தினர் என்னதான் பேசினாலும் சரியே இப்போது நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதை ஒவ்வொரு ஊழியரும் தமது கடமையாக்கிக் கொள்ள வேண்டும்.

இந்த முறை மிகக் குறைவான எண்ணிக்கை இருப்பதன் காரணமாக ஊழியர்களுக்கு சில கஷ்டங்களை சந்திக்க நேரிடாமல் போகலாம். அல்லது சந்திக்க நேரிடாது என்று சில ஊழியர்களின் எண்ணமாக இருக்கலாம். ஆனால் சில விதிமுறைகளின் பக்கம் விருந்தினர்களுக்கு ஊழியர்கள் கவனமூட்டும்போது அதனை சில விருந்தினர்கள் தீயதாக கருதலாம். உதாரணமாக, முகக் கவசம் அணிந்திருப்பதன் பக்கம் ஊழியர்கள் கவனமூட்டுவார்கள். சமூக இடைவெளியை பேண வேண்டும். அதன் பக்கம் கவனமூட்டுவார்கள். பொதுவாக இதனை நாம் பேணுவதில்லை. உணவு உண்ணும்போதும் சில கட்டுப்பாடுகளை கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால் அனைத்து விஷயங்களை கேட்ட பிறகும் கூட ஒருவர் கடுமையாக நடந்து கொள்கின்றார் என்றால், மேலும் இந்த விஷயங்களின் பக்கம் அவர் கவனம் செலுத்தவில்லை என்றால், மக்களின் விஷயங்களை கேட்ட பிறகும் அன்புடன் தமது கூற்றை விருந்தினர்களுக்கு புரிய வைக்க வேண்டும்.

பொதுவாக நாம் சில விதிமுறைகளை பேண வேண்டும் என்பதை விருந்தினர்களும் புரிந்திருக்கின்றனர். ஆனால் சில மக்கள் இயல்பாகவே சில விஷயங்களை விரைவாக தீயதாக கருதுகின்றனர். இது போன்ற ஒரு வகையான மக்கள் தான் பிரச்சனைகளை உருவாக்குகின்றனர். மேலும் ஊழியர்களின் நடைமுறையும் கடுமையாக ஆகிவிடும்போது பின்னர் மிக அதிகமாக விரும்பத்தகாத சூழல் உருவாகி விடும் வாய்ப்பு உள்ளது. எனவே ஒருவருக்கு ஒரு விஷயத்தை புரிய வைக்க வேண்டும். அல்லது விண்ணப்பிக்க வேண்டும். அல்லது ஒரு விஷயத்தை கூற வேண்டுமென்றால் மிக அதிகமான பொறுமையையுடனும், மென்மையுடனும் புரிய வையுங்கள்.

நம்பிக்கையாளர் விருந்தினரை கண்ணிப்படுத்துகின்றார். இது ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஈமான்..... ஹதீஸ் எண் 173)

நம்பிக்கையாளரின் அடையாளம் என்னவென்றால், அவர் விருந்தினரை கண்ணியப்படுத்துவார். எனவே நம்பிக்கையாளரின் இந்த சிறப்புத்தன்மை ஒவ்வொருவரிடமும் உருவாக வேண்டும். மழையின் காரணமாக ஹதீக்கத்துல் மஹ்தியில் மிக குறிப்பிட்ட எண்ணிக்கையிலேயே அங்கு பார்க்கிங் செய்ய முடியும். மைதானம் உள்ளபோதிலும் மழையின் காரணமாக அது ஈரமாக உள்ளது. மேலும் கார்கள் அங்கு வழுக்குவதற்கும், சிக்கிக் கொள்வதற்கும் அபாயம் உள்ளது. எனவே வேறொரு இடத்தில் பார்க்கிங் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கு பேருந்துகள் மூலமாக விருந்தினர்கள் கொண்டு செல்லப்படுவார்கள். அங்கு பணியில் இருப்பவர்கள் மிகவும் மெதுவாகவும், அன்புடனும் கார்களில் வருபவர்களுக்கு புரிய வைக்க நேரிடும். சில மக்கள் நேரடியாக வந்து விடுகிறார்கள். நாங்கள் வந்து விட்டோம். எனவே எங்களை உள்ளே செல்ல அனுமதியுங்கள் என சிலர் அழுத்தம் கொடுக்கின்றனர். மிக அன்புடன் அவர்களுக்கு புரிய வையுங்கள். விருந்தினர்களும் பணியிலுள்ளவர்களின் கூற்றுகளை புரிந்து கொள்ள வேண்டும். பரஸ்பர ஒத்துழைப்புடன் பணி செய்வதால் வேலைகளில் எளிமையும், வேகமும் உருவாகி விடுகிறது.

எனவே இரு புறமிருந்தும் ஒத்துழைப்பு இருக்க வேண்டும். இவர்கள் நமக்கு தொண்டாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் நமது கூற்றை கேட்க வேண்டும். மேலும் அதன்படி அமல் செய்ய வேண்டும் என்று மட்டுமே விருந்து உபசரிப்பவர் மீது விருந்தினர் எதிர்பார்ப்பு வைக்கக்கூடாது. மாறாக, விருந்தினர்களும் உருவாக்கப்பட்டுள்ள சட்ட திட்டங்களை பேணிப் பின்பற்றி நடக்க வேண்டும். அப்போது தான் பணி சரியான முறையில் நடைபெற முடியும்.

விருந்தினர்களும் இந்த விஷயத்தை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். இஸ்லாம் விருந்து உபசரிப்பவருக்கு விருந்தினரை கண்ணியப்படுத்துவதற்கு எங்கு வழிகாட்டியுள்ளதோ அங்கு விருந்தினர்களுக்கும் இந்த விஷயத்தின் பக்கம் கவனமூட்டியுள்ளது. அதாவது விருந்தினர் என்ற முறையில் உங்களுக்கும் சில பொறுப்புகள் உள்ளன. நீங்கள் விருந்தினராக ஒருவரிடத்தில் செல்லும்போது விருந்து உபசரிப்பவர்களின் மும்முரங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் அவர் அழைக்கும்போது செல்ல வேண்டும். அல்லது தகவல் கூறிவிட்டு செல்ல வேண்டும் என்று இஸ்லாம் தெளிவாக கூறியுள்ளது.

ஒரு பக்கம் வீட்டிற்கு வந்த விருந்தினருடன் நல்ல முறையில் நடக்க வேண்டும். அவர் எப்போது வந்தாலும் சரியே என்று விருந்து உபசரிப்பவருக்கு வழிகாட்டியுள்ளது. மற்றொரு பக்கம் ஒருவருடைய வீட்டிற்கு செல்லும்போது தகவல் தெரிவித்து விட்டு செல்லும்படி விருந்தினருக்கும் கூறியுள்ளது. ஒருவேளை தகவல் தெரிவிக்காமல் சென்றால் வீட்டிலுள்ளவர்கள் வீட்டினுள் நுழைவதிலிருந்து (அவரை) தடுத்து விட்டால் பின்னர் எந்த முறையீடும் செய்யாமல் திரும்பி சென்று விட வேண்டும்.

ஜல்ஸாவின் விருந்தினர்களுக்கு இந்த விஷயம் பொதுவாக பொருந்தாது. ஆயினும் நான் கூறியதுபோன்று இந்த வருடம் குறிப்பான

சூழலின் காரணமாக ஒரு வயதுக்கு உட்பட்ட வரை விதிமுறை வைக்கப்பட்டுள்ளது. அதாவது இந்த வயதிலிருந்து இந்த வயது வரையிலான மக்கள் வர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் வேறு சில உடல்நலத்தை உள்ளடக்கிய நிபந்தனைகளும் உள்ளன. அந்த நிபந்தனைகள் உடல் ஆரோக்கியம் சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன. அதனை கருத்தில் கொண்டவாறு இந்த விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த அடிப்படையில் உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து அனுப்பும்படி ஜமாஅத்களுக்கு கூறப்பட்டுள்ளது. நிபந்தனைகளை பூர்த்தி செய்பவர்களை மட்டுமே அனுப்ப வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று இந்த தேர்ந்தெடுப்பில் சில இடங்களில் கூடுதல் குறைவு ஏற்பட்டிருக்கலாம். சில மக்களுக்கு புகார்கள் உருவாகி இருக்கலாம். அதேபோன்று புதிதாக சில மக்கள் இந்த நாட்டில் வந்துள்ளனர். அவர்களால் நிபந்தனைகளை முழுமை செய்ய முடியாது. ஆனால் எங்களை நிச்சயம் ஜல்ஸாவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. தமது ஓர் உறவினருடன் சென்று விடலாம் என்று ஒருவேளை வெளியிலிருந்து வரக்கூடிய சில மக்களின் முயற்சி இருக்கும். அல்லது எங்களுக்கு கலந்து கொள்வதற்கான பாஸ் வழங்கப்பட வேண்டும் என்று தமது உள்ளூர் பகுதியின் நிர்வாகத்திடம் சிலர் பிடிவாதம் செய்யலாம். இவ்வாறு அமைப்பை உடைப்பதால் பிரச்சனைகள் உருவாகின்றன என்பதை அவர்கள் அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் ஒரு நம்பிக்கையாளருக்கு இந்த அடிப்படையான வழிகாட்டலை வழங்கியுள்ளான். மேலும் அடிப்படை நல்லொழுக்கத்தின் பக்கம் வழிகாட்டியுள்ளான். மேலும் வீட்டிலுள்ளவர்களின் அனுமதியின்றி எவருடைய வீட்டிற்கும் செல்லக்கூடாது. திரும்பிச் செல்லுங்கள் என்று கூறப்பட்டால் திரும்பிச் சென்று விட வேண்டும். எந்த முறையீடுமின்றி சென்று விட வேண்டும் என்று கட்டளை வழங்கியுள்ளான்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

وَاِنْ قِيْلَ لَكُمُ ارْجِعُوْا فَارْجِعُوْا هُوَ اَزْكٰى لَكُمْ

நீங்கள் திரும்பிச் செல்லுங்கள் என்று உங்களிடம் கூறப்பட்டால் நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள். இந்த விஷயம் உங்களுக்கும் மிகவும் தூய்மையானதாகும். (24:59)

ஜல்ஸாவில் வருவதற்கும், அதில் கலந்து கொள்வதற்கும் ஒரு பெரும் நோக்கம் உள்ளது. அது என்னவென்றால், தம்மை சீர்படுத்துவதும் தனது நஃப்ஸை தூய்மை செய்வதும் ஆகும். வலுக்கட்டாயமாக கலந்து கொள்வதை விட, என்ன வழிமுறை நியமிக்கப்பட்டுள்ளதோ அதைப் பேணுவது அதிகமான தூய்மைக்கு காரணியாக அமையும். சில மக்கள் எனக்கும் தொடர்ந்து கடிதம் எழுதுகின்றனர். அல்லது ஜமாஅத் அமைப்பிடம் கூறுகின்றனர்.

என்ன ஏற்பாடு நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ அதை அவர்கள் பேணி நடக்க வேண்டும். அவ்வாறு செய்தால் அது சிறந்ததாகும். தவறாகவும் நினைக்கக் கூடாது. இதனை முறையீடாகவும் செய்யக்கூடாது. அல்லாஹ்விடத்தில் துஆ செய்யுங்கள். அதுபோன்ற சூழலில் அதிகமாக உருக்கத்துடன் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் சூழலை விரைவில் இயல்பு நிலைக்கு கொண்டு வருவானாக. அதன் மூலம் சில மக்கள் தமது விருப்பத்திற்கேற்ப ஜல்ஸாவில் சுதந்திரத்துடன் கலந்து கொள்ள முடியும்.

திருக்குர்ஆனின் கட்டளைகளின்படி அமல் செய்வதற்காக சஹாபிகளிடம் விநோதமான வழிமுறைகள் இருந்தன. ஒரு சஹாபி இவ்வாறு கூறுகின்றார்: நான் பல முறை மக்களின் வீடுகளுக்கு பல்வேறு நேரங்களில் பொருத்தமற்ற நேரத்தில் இந்த நோக்கத்திற்காக மட்டுமே சென்று வந்தேன். அதாவது யாராவது ஒருவர் இது நேரமல்ல. உள்ளே வருவதற்கு அனுமதி இல்லை. எங்களால் சந்திக்க முடியாது என்று ஒருவர் என்னிடம் கூற வேண்டும். வீட்டினுள் செல்வதற்கு எங்களால் அனுமதி தர முடியாது. சந்திக்க முடியாது. திரும்பிச் செல்லுங்கள் என்று என்னிடம் ஒருவர் கூற வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்று வந்தேன். ஒருவர் என்னிடம் இவ்வாறு கூறினால் நான் திருக்குர்ஆனின் இந்த கட்டளையின் மீது அமல் செய்து நற்கூலியை பெறக்கூடியவனாக ஆகிவிடுவேன் என்பது எனது ஆசையாக இருந்தது. ஆனால் அவ்வாறு ஒருபோதும் நடக்கவில்லை. நான் எவருடைய வீட்டிற்கு சென்றபோதும் யாரும் என்னிடம் இப்படி வருத்தம் தெரிவிக்கவில்லை. அதாவது என்னை திருப்பி அனுப்பவில்லை.

(தஃப்ஸீர் துர்ரே மன்ஷூர் தொகுதி 6 பக்கம் 175, 176 – 2011 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

எனவே விருந்தினரும், விருந்து உபசரிப்பவரும் இரு தரப்பும் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக தமது கடமைகளை முழுமை செய்ய முயன்று வந்தனர். பொதுவான நல்லொழுக்கத்தை மேற்கொள்வதற்கும் திருக்குர்ஆனின் வழிகாட்டல்படி ஆர்வத்துடனும் உத்வேகத்துடனும் அமல் செய்வது தொடர்பாக நான் இந்த உதாரணத்தை கூறியுள்ளேன். மேலும் இது ஓர் அடிப்படை வழிகாட்டல் ஆகும். ஆனால் சில மக்கள் உள்ளனர். அவர்கள் தமது விஷயத்தை ஒப்புக் கொள்ளச் செய்வதற்காக சில விஷயங்களை கூறி விடுகின்றனர். அல்லது கூறுவர். அவ்வாறு செய்யப்பட்டால் பின்னர் ஏற்பாட்டாளர்களும் அதனை நிராகரித்து விடக்கூடாது. பொதுவான சூழலில் நிர்வாகம் நிராகரிப்பதில்லை. நிராகரிக்கவும் கூடாது. ஒருவேளை அவ்வாறு செய்தால் அந்நிலையில் நிச்சயமாக விருந்தினர்களுக்குரிய உரிமைகளை அவர்கள் வழங்க மாட்டார்கள். மேலும் போதனைக்கு எதிராக இருப்பர். மேலும் இஸ்லாத்தின் போதனைகள் மற்றும் அந்த போதனைகளின்படி அமல் செய்வதற்கு நமக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சில குறிப்பான அழுத்தத்தை வழங்கியுள்ளார்கள். மேலும் தமது செயல்களால் முன்னுதாரணங்களை நிலைநாட்டியுள்ளார்கள். பொருத்தமற்ற நேரத்தில் இரவில் விருந்தினர்கள் வந்து விட்டபோது அப்போதும் கூட அவர்களுக்கு விருந்து உபசரிப்பு செய்து கண்ணியப்படுத்தியுள்ளார்கள்.

ஆயினும் நான் கூறியதுபோன்று இந்த ஜல்ஸா எந்த சூழலில் நடைபெறுகின்றதோ அது குறிப்பான சூழல்களாகும். இதில் நிர்பந்தத்தின் காரணமாக விருந்தினர்களை கலந்து கொள்வதிலிருந்து தடுக்கப்படுகின்றது. எனவே எந்த முறையீடுமின்றி இதன்படி அமல் செய்ய வேண்டும். ஆனால் அத்துடன் எந்த மக்களுக்கு அழைப்பிதலும் அனுமதி கடிதமும் கிடைத்துள்ளதோ அவர்களிடம் நான் இதனைக் கூற விரும்புகின்றேன். அதாவது ஏதாவது கடுமையான நிர்பந்தம் இருந்தால் அன்றி அவர்கள் நிச்சயம் ஜல்ஸாவில் கலந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் எவர்களுக்கு அனுமதி கடிதம் வழங்கப்படவில்லையோ அவர்களின் உரிமை பறிக்கப்பட்டு விடும். கால நிலையின் மாற்றத்தை சாக்குப் போக்காக கூற வேண்டாம்.

கால நிலை மாறுபாட்டைப் பற்றி கூறப்பட்டது. எனவே கலந்து கொள்பவர்கள் இதனை நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ரப்வா அல்லது காதியானில் குளிர் நாட்களில் திறந்த வெளியில் ஜல்ஸா நடைபெறுகின்றன. ரப்வாவில் தற்போது கட்டுப்பாடுகளின் காரணமாக ஜல்ஸா நடக்கவில்லை. பல ஆண்டுகளாக நடக்கவில்லை. ஆனால் ஒரு காலத்தில் நடந்து வந்தது. குளிர் காலத்தில் ஜல்ஸா நடந்தபோது பின்னர் மக்கள் மழை பெய்தபோதும் மிக நிம்மதியாக அமர்ந்து கொண்டு ஏதாவதொரு வகையில் தங்களைத் தாங்களே மறைத்துக் கொண்டு ஜல்ஸா கேட்டு வந்தார்கள்.

இங்கு இஸ்லாமாபாதில் நடந்து வந்தபோதும் மழையின் காரணமாக மாநாட்டுத் திடலில் மிக மோசமான சூழல் ஏற்பட்டிருந்தது. கீழே அமர்வதற்கு வெறும் புல் மட்டுமே விரிக்கப்பட்டிருந்தது. கீழே முறையாக எந்தவொரு தளமும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. அதாவது தற்போது மரப்பலகைகள் உருவாக்கப்படுவதுபோன்று எந்த தலமும் அமைக்கப்பட்டிருக்கவில்லை.


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

எனக்கு நினைவு உள்ளது. நான் ஒரு ஜல்ஸாவில் கலந்து கொண்டேன். அதன் காரணமாக மாநாட்டுத் திடலிலும் ஒரு பகுதியில் தண்ணீர் வந்து விட்டது. தரை ஈரமாகி விட்டது. ஓரத்தில் தண்ணீர் தேங்கியிருந்தது. எந்த மக்கள் ஓரங்களில் நின்று கொண்டு தொழுது வந்தார்களோ அவர்களின் முட்டுகளிலும் நெற்றிகளிலும் தண்ணீர் இருந்தது. அல்லது அவர்கள் சேற்றில் இருந்தனர். என்னுடனும் அவ்வாறு நடந்துள்ளது. சஜ்தாவிலிருந்து தலையை எடுத்ததும் முதலில் நெற்றியை சுத்தப்படுத்த வேண்டியதிருந்து. அதாவது கண்களில் தண்ணீர் அல்லது சேறு வந்து விடாமல் இருப்பதற்காகவும் அவ்வாறு செய்யப்பட்டது. ஆனால் அனைத்து மக்களையும் நான் கண்டேன். ஓர் உத்வேகத்துடன் ஜல்ஸாவில் கலந்து கொண்டிருந்தனர். அல்லாஹ்வின் அருளால் தற்போதும் அந்த உத்வேகம் உள்ளது. அநேகமாக அஹ்மதிகளின் பெரும்பான்மையிடம் இந்த உத்வேகம் காணப்படுகிறது என்றே கூற வேண்டும். ஆயினும் சில மென்மையான இயல்பு கொண்டவர்களும் இருப்பார்கள். அல்லது சூழலின் காரணமாக தற்போது அந்த காலத்திலிருந்து தொலைவில் வந்து விட்டதன் காரணமாக சில நுட்பமான இயல்பு வந்த விட்டது. அப்படிப்பட்டவர்களிடம் நான் கூறுகின்றேன். அவர்களுக்கு அனுமதி கடிதம் கிடைத்திருந்தால் அவர்கள் நிச்சயம் கலந்து கொள்ள வேண்டும். எந்த வகையிலும் சாக்குப் போக்குகளை கூறக்கூடாது.

நான் இதற்கு முன்னர் கூறியதுபோன்று சில மக்கள் இயல்பாகவே சண்டையிடக்கூடியவர்களாக இருக்கின்றனர். சிலர் இயல்பாகவே முறையீடு செய்பவர்களாக இருக்கின்றனர். இந்த ஏற்பாடு இவ்வாறு இருந்திருக்க வேண்டும். இவ்வாறு ஏன் உள்ளது? என்று நிர்வாகத்தின் மீது குறை காணக்கூடியவர்களும் உள்ளனர். அல்லது இன்ன காரணத்தால் நாங்கள் வரவில்லை என்று கலந்து கொள்ளாததற்கு சாக்குப் போக்குகளை முன் வைக்கக்கூடிய மக்களும் உள்ளனர். எனவே எவ்வாறிருப்பினும் இந்த விஷயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். இன்றும், நாளையும், நாளை மறுநாளும் எந்த மக்களுக்கு அழைப்பிதழ் கிடைத்துள்ளதோ அல்லது எந்த மக்களுக்கு அனுமதி கடிதம் கிடைத்துள்ளதோ அவர்கள் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும்.

நான் சில நிர்வாக ரீதியிலான விஷயங்களையும் கூறி விடுகின்றேன். உணவு உண்ணும் இடத்தில் உணவை பெற்றுக் கொண்டு செல்லும்போதும், உணவு உண்ணும்போதும் இடைவெளியை பேணும்படி கவனமூட்டுவதற்கு நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளதோ அதனை பேணுங்கள். எல்லாரிடத்திலும் சமூக இடைவெளியை பேணுங்கள் என்று எழுதி பல இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. ஆனால் சில மக்களுக்கு என்ன தான் வழிகாட்டல் வழங்கினாலும் அதைப் படிப்பதற்கு பழக்கம் இல்லை. அதன் பக்கம் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை. மேலும் இன்றைய நாட்களில் பொதுவாக இந்த நிலை காணக்கிடைக்கின்றன. அதாவது சிலர் சமூக இடைவெளியை கருத்தில் கொள்வதில்லை.

எனவே உண்ணும் போதும், உணவை பெறும்போதும் சமூக இடைவெளியை பேணுங்கள். சிறப்பான கவனம் செலுத்த வேண்டும். உணவு உண்ணும்போது முகக்கவசத்தை கழற்றுவது நிர்பந்தமாகும். ஆனால் வரிசையில் நின்று உணவை பெறும் நேரத்தில் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். இதேபோன்று பணி செய்யக்கூடிய ஊழியர்களும் இந்த விஷயத்தை கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும். எப்போதும் முகக்கவசம் அணிந்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஊழியர்கள் முகக்கவசம் அணிவதில் ஏதாவது சுணக்கம் காட்டினால், குறைவு வைத்தால் அல்லது அதை பேணுவதை கருத்தில் கொள்ளவில்லை என்றால் பின்னர் விருந்தினர்களும் அமல் செய்ய மாட்டார்கள்.

எனவே பார்க்கிங் இடமாக இருக்கட்டும். அல்லது குளியலறையாக இருக்கட்டும். அல்லது வழிப்பாதையாக இருக்கட்டும். மாநாட்டுத் திடலாக இருக்கட்டும். அல்லது உணவு உண்ணும் இடமாக இருக்கட்டும். எல்லா இடங்களிலும் முகக்கவசம் அணிந்திருப்பதை பணி செய்யக்கூடியவர்களும், ஊழியர்களும் கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும். மாநாட்டுத் திடலிலும் முகக்கவசம் அணிந்து அமர்ந்திருக்க வேண்டும். ஆயினும் ஜமாஅத் அமைப்பு சில முறை ஆய்வு செய்வதற்காக முகக்கவசத்தை கழற்றி விட்டு முகத்தை காட்டும்படி கூறினால் பின்னர் அது தொடர்பாக அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

இதேபோன்று ஜமாஅத் அமைப்பின் ஏற்பாட்டின் கீழ் ஒரு சொற்பொழிவின்போது ஒருவர் தக்பீர் முழக்கம் இடுகின்றார் என்றால் இந்த விஷயத்தையும் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். அதாவது முழக்கமிடும்போதும் அல்லது அதற்கு பதிலளிக்கும்போதும் எவரும் முகக்கவசத்தை கழற்றக்கூடாது. சிலர் கவனமற்று இருக்கின்றார்கள். இந்த முறை இது ஒரு முற்றிலும் ஒரு புதிய விஷயமாகும். எனவே மிக அதிகமாக எச்சரிக்கையுடனும், கவனத்துடனும் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். தம்மை காத்துக் கொள்வதற்கும், மற்றவர்களை பாதுகாப்பதற்கும் மூக்கு, வாய் இரண்டையும் மறைப்பது அவசியமாகும்.

அடுத்து கேட்டில் உள்ளே நுழையும்போது இரண்டு வகையான பரிசோதனை நடைபெறும். தடுப்பூசி போட்டதற்கான அட்டை பரிசோதிக்கப்படலாம். இரண்டாவதாக அனுமதி கடிதமும் பார்க்கப்படலாம். அதனையும் பரிசோதிப்பார்கள். எனவே இந்த அடிப்படையிலும் பரிசோதிப்பவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். இத்தனை பரிசோதனைகள் எங்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்துகின்றது என்பதை வெளிப்படுத்தாதீர்கள். இந்த அனைத்து முன்னெச்சரிக்கைகளும் கலந்து கொள்ளக்கூடியவர்களின் நன்மைக்காகவே செய்யப்படுகின்றன.

மேலும் ஒரு விஷயத்தை நான் கூற விரும்புகின்றேன். அது என்னவென்றால், மிகக் குறைந்த எண்ணிக்கை தான் என்ற எண்ணத்திலும் இந்த அனைத்து முன்னெச்சரிக்கைகளின் காரணமாகவும் பாதுகாப்பு ஏற்பாட்டில் Relax ஆக இருந்து விடாதீர்கள். இது தொடர்பாக டியூட்டியில் உள்ள ஊழியர்களும் கலந்து கொள்பவர்களும் முழுமையாக விழிப்புடன் இருக்க வேண்டும். ஏற்கனவே வழிகாட்டல்கள் கிடைத்து வந்ததுபோன்றும், வழிகாட்டல்கள் இருந்து வந்தது போன்றும் இப்போதும் அதனை பின்பற்ற வேண்டும்.

அடுத்து உணவு குறித்து இதனையும் நான் கூறி விடுகின்றேன். மதிய வேளை உணவு இன்ஷா அல்லாஹ் உணவுக் கூடாரத்தில் வழங்கப்படும். அங்கு நான் கூறிய விஷயங்களை கருத்தில் கொள்ளுங்கள். ஆனால் இரவு உணவு பார்சல் செய்யப்பட்டு வழங்குவதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர். உங்களது வீடுகளுக்கு எடுத்துச் செல்ல முடியும். எவ்வளவு விரைவாக பங்கிட முடியுமோ பங்கிடுவதற்கு முயற்சி செய்யப்படும். ஆனால் ஒருவேளை சிறிது காலதாமதம் ஆகிவிட்டால் அதனால் அவசரப்பட வேண்டாம்.

அதேபோன்று ஜல்ஸாவை கேட்பது குறித்தும் பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. அதனை நான் மீண்டும் கூறி விடுகின்றேன். ஜல்ஸாவை கேளுங்கள். ஒருவர் மற்றவரை நீண்ட காலம் கழித்து சந்திப்பதன் காரணமாக இங்கும் அங்கும் அமர்ந்து அன்பர்களுடனோ அல்லது நண்பர்களுடனோ பேச்சுகளில் மும்முரமாகி விடாதீர்கள். ஏனென்றால் ஜல்ஸாவிற்காக வந்துள்ளீர்கள். எனவே ஜல்ஸாவை கேளுங்கள்.

இந்த தொற்றின் காரணமாக சில மக்கள் இருக்கின்றார்கள். இன்னும் கூறப்போனால் மிக நெருக்கமான நபர்கள் இருப்பார்கள். ஒருவர் மற்றவருடைய நண்பர்களும் இருப்பார்கள். மேலும் பல்வேறு நகரங்களில் வசிப்பதன் காரணமாக ஒரு நீண்ட நெடிய காலத்திற்குப் பிறகு சந்திக்கக் கூடியவர்கள் இருப்பார்கள். ஏனென்றால் இந்த இடைப்பட்ட காலத்தில் ஜமாஅத் அளவில் எந்த நிகழ்ச்சிகளும் நடக்கவில்லை. எனவே நீண்ட காலம் கழித்து சந்திப்பதால் அவர்களை இந்த விஷயம் ஜல்ஸா நிகழ்ச்சிகளை கேட்பதிலிருந்து இழப்பிற்குரியவர்களாக ஆக்கி விட வேண்டாம். அல்லது துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துவதிலிருந்து அவர்களை இழப்பிற்குரியவர்களாக ஆக்கி விடக்கூடாது. ஜல்ஸாவில் வந்துள்ளீர்கள் என்றால் பின்னர் அதிலிருந்து முழுமையாக பயன் பெற வேண்டும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஜல்ஸாவின் நாட்களில் திக்ரே இலாஹியின் பக்கம் கவனமூட்டியவாறு ஒரு கருத்தை எடுத்துரைத்துள்ளார்கள். அன்னார் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: எனக்கு நினைவு உள்ளது. ஜல்ஸாவின் நாட்களில் திக்ரே இலாஹி செய்யுங்கள் என்றும், சபையில் அமர்ந்திருக்கின்றபோது திக்ரே இலாஹி செய்ய வேண்டும் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான். இதன் பயனாக

اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ என்று இறைவன் கூறியுள்ளான். நீங்கள் திக்ரே இலாஹி செய்தால் அல்லாஹ்வும் உங்களை நினைவு கூரத்தொடங்கி விடுவான். எந்த நபரை அவரது எஜமானர் நினைவு கூருவானோ அவரை விட நற்பேறு மிக்க மனிதன் வேறு யார் இருக்க முடியும்?

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 4 பக்கம் 258)

எனவே இந்த நாட்களில் திக்ரே இலாஹி செய்வது அல்லாஹ்வின் அருட்களை மேலும் ஈர்ப்பதற்கு காரணியாக அமையும். எனவே இந்நாட்களில் குறிப்பாக திக்ரே இலாஹியின் பக்கம் கவனம் செலுத்துங்கள். மேலும் உலகில் பரவியுள்ள அஹ்மதிகள் எங்கெல்லாம் ஒன்றுகூடி ஜல்ஸா கேட்கின்றார்களோ அல்லது குடும்பத்தினருடன் இணைந்து ஜல்ஸா கேட்கின்றார்களோ அவர்களும் திக்ரே இலாஹியின் பக்கம் கவனம் செலுத்தட்டும். அதன் மூலம் அல்லாஹ்வின் அருட்களை அதிக அதிகமாக நாம் ஈரப்பவர்களாக இருப்போம். மேலும் நமது ஆன்மிக நிலையை மேம்படுத்தக் கூடியவர்களாக இருப்போம். மேலும் உலகின் ஆபத்துகளிலிருந்தும் அல்லாஹ்வின் அருட்களை ஈர்த்தவாறு அதிலிருந்து தப்பிக்கக் கூடியவர்களாக இருப்போம். எனவே இந்த ஜல்ஸாவின் சூழலிலிருந்து முழுமையாக பயன்பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். அறிவார்ந்த மற்றும் தர்பிய்யத் ரீதியிலான சொற்பொழிவை கேட்டும், துஆக்களின் பக்கம் கவனம் செலுத்தியும் பயனடைந்து வாருங்கள். இந்த முறை குறைவான எண்ணிக்கையின் காரணமாக ஒவ்வொருவருக்கும் நாற்காலியில் அமர்வதற்கு ஏற்பாடு உள்ளது. எனவே நீண்ட நேரம் அமர வேண்டும் என்று எந்த சாக்குப்போக்கும் கூற முடியாது. பொதுவாக ஜல்ஸாவில் ஓர் அமர்வு என்பது நீண்டதாகவும் அமையவில்லை. பொதுவாக இரண்டரை மணி நேரம் அல்லது மூன்று மணி நேரம் அல்லது அதற்கும் குறைவாகவே அமர்வு அமைந்துள்ளது. எனவே நிலத்தில் அமர நேரிட்டாலும் அமர்வது ஒன்றும் கடினமும் அல்ல.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு மேற்கோளை இறுதியில் நான் எடுத்துரைக்கின்றேன். அன்னார் கூறுகின்றார்கள்: அனைத்து சகோதரர்களும் கவனத்துடன் கேளுங்கள். நான் எனது ஜமாஅத்திற்கும், எனக்கும், எனது நஃப்ஸிற்கும் இதையே விரும்புகின்றேன். வெளிப்படையான சொற்பொழிவுகளில் அமைகின்ற பேச்சுக்களை மட்டுமே விரும்பக்கூடாது. சொற்பொழிவாளர் எப்படிப்பட்ட அற்புதமான சொற்பொழிவாற்றுகின்றார் என்பதில் அனைத்து நோக்கங்களும் வந்து நின்றுவிடக்கூடாது. சொற்களில் எவ்வளவு அழுத்தம் உள்ளது என்பது நோக்கமாக இருக்கக்கூடாது. நான் இந்த விஷயத்தில் திருப்தி கொள்வதில்லை. நான் இதையே விரும்புகின்றேன். அதாவது என்ன பணி செய்தாலும் அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டும். என்ன விஷயத்தை கூறினாலும் அது இறைவனுக்காக இருக்க வேண்டும். எனது இயல்பின் தேட்டம் இதுவாகவே உள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 398, 399)

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: முஸ்லிம்களிடம் வீழ்ச்சியும், பின்னடைவும் வருவதற்கு ஒரு பெரும் காரணம் இதுவே ஆகும். எந்த அளவிற்கு மாநாடுகளும், கூட்டங்களும், சபைகளும் நடைபெறுகின்றன. அங்கு பெரும் பெரும் வாய்சொல் வீரர்கள் மற்றும் சொற்பொழிவாளர்கள் சொற்பொழிவாற்றுகின்றனர். சமுதாயத்தின் நிலையின் மீது கவிஞர் ஒப்பாரி வைக்கின்றார். அதன் எந்த தாக்கமும் ஏற்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் உள்ளது? சமுதாயம் நாளுக்கு நாள் முன்னேற்றத்திற்கு பகரமாக வீழ்ச்சியின் பக்கமே செல்கின்றது. அந்த விஷயம் என்னவென்றால், அந்த சபைகளில் வரக்கூடியவர்கள் கலப்பற்றத் தன்மையுடன் வருவதில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 401)

எவ்வாறிருப்பினும் ஒரு விஷயம் என்னவென்றால், எல்லா சொற்பொழிவுகளையும் கேளுங்கள். சொற்பொழிவாளர் சிறந்தவரா? இவரது சொற்பொழிவை கேட்க வேண்டும். இவரது சொற்பொழிவை கேட்கக்கூடாது என்றெல்லாம் பார்க்காதீர்கள். ஜல்ஸாவில் அமர்ந்து அனைத்து சொற்பொழிவுகளையும் கேளுங்கள். முழுமையான கலப்பற்ற தன்மையுடனும் கவனத்துடனும் கேட்க வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியை பெற வேண்டும் என்று துடிப்பு இருக்கும்போதுதான் இந்த கலப்பற்ற தன்மை இருக்கும். துடிப்பு இருக்கும்போது அந்த நிலைகளே நமது நிலைகளை சரி செய்யக்கூடியதாக இருக்கும். நமது சந்ததிகளையும் சீர் செய்யக்கூடியதாக இருக்கும். அவர்களையும் நேர்வழியின் பக்கம் கொண்டு வரக்கூடியதாக அமையும். அதற்காக நாம் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். ஜல்ஸாவில் கலந்து கொள்ளக்கூடிய நம்மில் ஒவ்வொருவரும் அல்லது கேட்கக்கூடிய ஒவ்வொருவரும் தம்மிடத்தில் கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வை உருவாக்கக்கூடியவராக திகழ அல்லாஹ் அருள் செய்வானாக. மேலும் கால நிலைக்காகவும் இந்நாட்களில் துஆ செய்யுங்கள். கால நிலை நமது நிகழ்ச்சிகளில் எவ்வகையிலும் தடையாக அமையக்கூடாது. மாறாக, அல்லாஹ் அதனை நமது ஹக்கில் ஆக்கி விடுவானாக.

(தமிழில்: மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர் சாஹிப்)

(கேள்வி-பதில் 9வது பக்கத்தின் தொடர்ச்சி...)

ஜமாஅத்தின் தூதுச் செய்தியை நீங்கள் ஒப்புக் கொள்கின்றீர்களா? இல்லையா? என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால் நீங்கள் உங்களை நீங்களே முஸ்லிம் என்று கூறிக் கொள்கின்றீர்கள். எனவே அல்லாஹ் மற்றும் தூதரின் கட்டளை என்னவென்றால், அல்லாஹ் இறக்கிய திருக்குர்ஆனை ஓதுவதற்கு உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். ஐவேளை தொழுகைகளை தொழுவதற்கு உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். இஸ்லாத்தின் தூண்கள் மீது நம்பிக்கை இருக்க வேண்டும். அதற்கேற்ப அமல் செய்ய வேண்டும். எனவே நீங்கள் உங்களை முஸ்லிம்கள் என்று கூறுகின்றீர்கள். எனவே அல்லாஹ்வின் தூதரின் மீது உங்களுக்கு நம்பிக்கை இருக்குமென்றால் அவரின் சுன்னத்தின்படி நீங்கள் அமல் செய்ய வேண்டும். அப்போதுதான் உங்களின் ஈமான் முழுமையாகும்.

பின்னர் திருக்குர்ஆன் வடிவில் அல்லாஹ் இறக்கியுள்ள ஷரீஅத்தை படிப்பதற்கு நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். உங்களுக்கு திருக்குர்ஆன் படிக்கத் தெரியாது என்றால் நீங்கள் அதனை படிக்க வேண்டுமென்றால் உங்களுக்கு திருக்குர்ஆனை கற்றுக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்று நீங்கள் அவர்களிடம் கூறுங்கள். இவ்வாறு நீங்கள் அவர்களுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுக்க வேண்டும். நீங்கள் அஹ்மதி ஆகி விடுங்கள். அல்லது ஆக வேண்டாம் என்றெல்லாம் அவர்களிடம் கூற வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு அவர்கள் இஸ்லாத்தின் சரியான போதனை குறித்து அறிந்து கொள்ளும்போது பின்னர் சுயமே அடுத்த அடியை அவர்களே எடுத்து வைத்து விடுவார்கள். எங்களது மவ்லவி எங்களுக்கு ஒன்றும் கற்றுக் கொடுக்கவில்லை. நீங்கள் எங்களுக்கு இதனை கற்றுக் கொடுத்துள்ளீர்கள். நீங்கள் யார்? என்று அவர்களே உங்களிடம் அப்போது கேட்பார்கள். இவ்வாறு விஷயம் தொடரும். பின்னர் தப்லீக்கின் வழிகளும் திறந்து விடும். இரண்டாவது விஷயம் என்னவென்றால், அவர்களுக்காக அதிகம் துஆவும் செய்ய வேண்டும். முஸ்லிம் சமுதாயத்திற்காகவும் துஆ செய்ய வேண்டும். இஸ்லாத்தின் பெயர் மட்டுமே எஞ்சியிருக்கும் காலம் இதுவாகவே இருந்தது. மார்க்கமும் எஞ்சியிருக்கவில்லை. இஸ்லாமும் எஞ்சியிருக்கவில்லை. பெயர் மட்டுமே எஞ்சியுள்ள ஓர் இஸ்லாம் உள்ளது. இதன் காரணமாகவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்ற வேண்டியது ஆகிவிட்டது. அதனால் தான் இந்த மஹ்மதியும், மஸீஹும் வந்துள்ளார். அவர் மக்களை மீண்டும் இறைவனுக்கு அருகில் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. ஒருவர் மற்றவரின் உரிமைகளை செலுத்துவதன் பக்கம் அவர்களுக்கு கவனமூட்ட நேரிட்டது. ஆக இந்த விஷயங்களை மக்கள் மறந்து விட்டனர். எனவே தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் வந்துள்ளார்கள். இதுவே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வருகையின் காலமாக இருந்தது. இதுவே வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பணியாகும். வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டவர்களின் பணியும் இதுவே ஆகும். (தொடரும்)

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)


## *நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 103 2131***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

## கேள்வி – பதில்

## ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களிடம் கேட்கப்பட்ட முக்கியமான கேள்விகளும், அதற்கு வழங்கப்பட்ட நுட்பமான பதில்களும்

**குறிப்பு: ஹுஸூர் அவர்கள் பல்வேறு நேரங்களில் கடிதங்கள் மற்றும் ஆகூஹ வின் பல்வேறு நிகழ்ச்சிகளில் முக்கியமான விவகாரங்கள் குறித்து அருளுக்குரிய வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்கள். அதிலிருந்து சிலவற்றை வாசகர்களின் நன்மைக்காக அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகைக்கு நன்றி செலுத்தியவாறு வெளியிடப்படுகின்றது. (நிர்வாகம்)**

**கேள்வி:** ஹுஸூர் (அய்ய) அவர்களுடன் பங்களாதேஷ் முரப்பிமார்களின் சந்திப்பு 8 டிசம்பர் 2020 அன்று நடைபெற்றது. அதில் ஒரு முரப்பி சாஹிப் ஹுஸூர் அவர்களிடம் இவ்வாறு வேண்டினார்: முதலில் பங்களா தொடர்பாக என்ன கட்டளை வழங்கப்பட்டிருந்ததோ தற்போது அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படும் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இல்ஹாம் வந்தது. ஹுஸூர் அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து இது தொடர்பாக சிலவற்றை கேட்க விரும்புகின்றோம் என்று அவர் கூறினார்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் இது குறித்து கீழ்க்கண்ட வழிகாட்டலை வழங்கினார்கள்: தற்போது ஊக்கமளித்து ஊக்கமளித்து 130 வருடங்கள் ஆகி விட்டன. இனி பங்களாவாசிகள் ஏதாவது பணி செய்தால் தான் ஊக்கமளிக்கப்படும். இப்போது பணி செய்யுங்கள். மேலும் பணி செய்து காட்டுங்கள். உங்களிடத்தில் தக்வாவின் தரத்தை உயர்த்துங்கள். உங்களின் மார்க்கத் தொண்டாற்றும் ஆர்வத்தின் தரத்தை உயர்த்துங்கள். பின்னர் அதனை செயல் வடிவம் கொடுங்கள். நாட்டில் ஒரு புரட்சியை உருவாக்க முயற்சி செய்யுங்கள். எவ்வளவு எதிர்ப்பு உருவாகுமோ உருவாகட்டும். அது அதே அளவிற்கு ஜமாஅத்தின் அறிமுகத்திற்கு காரணமாகின்றது. எதிர்ப்பு உரம் ஆகும். எத்தனை அஹ்மதிகளுக்கு அடி விழுகின்றதோ அதே அளவில் அறிமுகமும் ஏற்படும். பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு அடி விழுகின்றது. அதே அளவிற்கு வெளி நாடுகளில் இந்த அளவிற்கு அதிமாக ஜமாஅத்தின் அறிமுகம் ஏற்பட்டு வருகின்றது. இன்னும் கூறப்போனால் தற்போது உள்நாட்டிலும் ஏற்பட்டு வருகிறது.

முதலில் பாகிஸ்தானில் நகரங்களில் மட்டுமே ஜமாஅத்திற்கு எதிர்ப்பு இருந்து வந்தது. நகர்ப்புறவாசிகள் அறிந்திருத்தனர். தற்போது கிராமப்புறங்களிலும் சிறிய சிறிய இடங்களிலும் எதிர்ப்பு ஏற்படுகின்றது. எல்லா இடங்களிலும் தெரிந்து விட்டது. இந்த அறிமுகத்தின் காரணமாக வெளி உலகத்திற்கும் அறிமுகம் ஏற்பட்டு வருகிறது. உள்நாட்டிலும் சில நல்லியல்பு படைத்த மக்களுக்கு அஹ்மதிய்யா ஜமாஅத் என்றால் என்ன? இஸ்லாம் பற்றி அவர்களுக்கு என்ன எண்ணம் இருந்தன? இஸ்லாத்தை குறித்து இவர்கள் என்ன புரிந்துள்ளார்கள்? அவர்களின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு என்ன அந்தஸ்து உள்ளது? இறைவனின் ஏகத்துவத்தை இவர்கள் எவ்வாறு நம்புகின்றார்கள்? என்று நாமும் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற உணர்வு அங்குள்ள உள்ளூர்வாசிகளுக்கு ஏற்பட்டு வருகின்றது.

அவர்கள் ஆய்வு செய்கின்றபோது அந்த தேடுதலின் காரணமாக பின்னர் அவர்கள் ஜமாஅத்திற்கு அருகில் வருவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்து விடுகின்றது. எனவே இந்த எதிர்ப்பானது உங்களுக்கு உரத்திற்கான பணியை செய்கின்றது. இதிலிருந்து பயன் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். நீங்கள் தியாகங்கள் செய்கின்றபோது அதன் பிறகு உங்களுக்கு ஊக்கமும் அளிக்கப்படும். அதற்காக அல்லாஹ்வின் அருளால் நீங்கள் தியாகங்களும் செய்துள்ளீர்கள். பள்ளிவாசல்களில் குண்டு வெடித்துள்ளது. நமது முரப்பியின் காலும் வீணாகி உள்ளது. காயங்களும் அடைந்துள்ளனர். ஷஹீதும் ஆகியுள்ளனர். எனவே அவ்வப்போது இதுபோன்ற சம்பவங்கள் நடந்து வருகின்றன. நிலைமை சிறந்ததாக ஆகுவதற்கு அல்லாஹ்விடம் நான் துஆவும் செய்து வருகின்றேன். கவலையும் இருந்து வருகிறது. எனினும் அத்துடன் ஊக்கத்திற்கான அந்தஸ்தை பெறுவதற்கு நீங்களும் முயற்சி செய்ய வேண்டும். எனவே நான் அஞ்சி அஞ்சி பகலை கழித்தேன். மேலும் இறையச்சத்துடன் இரவை கழித்தேன். மேலும் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காக என்னிடம் என்ன பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதனை ஒரு சிறப்பான ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் நாட்டில் மூலை வரை பரப்புவேன் என்று ஒவ்வொரு முரப்பியும், முஅல்லிமும் உறுதி எடுக்க வேண்டும். எல்லாவற்றையும் விட நீங்கள் உங்களது செயல் முன்னுதாரணத்தை வெளிப்படுத்த வேண்டும். உங்களிடம் போதுமென்ற மனதை உருவாக்க வேண்டும். மேலும் வாழ்க்கையை கழிப்பதற்கு என்னவெல்லாம் சிறிது வழங்கப்படுகின்றதோ மேலும் ஜமாஅத்தின் புறமிருந்து வழங்கப்படுகின்ற சிறிதளவு வசதி வாய்ப்புகளிலிருந்து அதிக அதிகமாக பயன்பெற வேண்டும். மேலும் அதனை பெரிதாக கருத வேண்டும். மேலும் உங்களது தியாகத்தின் தரத்தை உயர்விலும் உயர்வாக ஆக்கிக் கொண்டே செல்ல வேண்டும். அல்லாஹ்வுடனான தொடர்பில் முன்னேற வேண்டும். உங்களது இரவுகளை உயிர்ப்பிக்க வேண்டும். குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் தஹஜ்ஜுத் தொழுவது ஒவ்வொரு முரப்பி மற்றும் முஅல்லிமின் பணியாகும். நீங்கள் ஒரு மணி நேரம் தஹஜ்ஜுத் தொழுகின்றீர்களா? மேலும் நீங்கள் இரவில் எழுந்து நஃபில் தொழுகையில் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அழுதழுது துஆ செய்கின்றீர்களா? உங்களை நீங்களே ஆய்வு செய்ய வேண்டும். அல்லாஹ் நமக்கு எளிமையை உருவாக்குவானாக. ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளை செய்வானாக.

அடுத்து திருக்குர்ஆனை ஆழ்ந்து சீர்தூக்கி படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். ஒரு சில கட்டுரைகளை மட்டும் படித்து விடுவதால் உங்களுக்கு ஒன்றும் கிடைத்து விடாது. உங்களது அறிவை வளர்த்துக் கொள்ளுங்கள். அதனை அதிகரித்துக் கொண்டே செல்ல முயற்சி செய்யுங்கள். இதே விஷயம் தான் எதிர்காலத்திலும் உங்களுக்கு பயன் தரும். இன்ஷா அல்லாஹ். மேலும் இதிலிருந்து பயன் பெற்றவாறு உங்களால் மற்ற ஆலிம்களுடன் விவாதம் செய்வதற்கும் தகுதியுடையவராக ஆக நீங்கள் ஆக முடியும். மேலும் பொது மக்களுக்கும் எடுத்துரைக்கும் தகுதி உங்களிடம் உருவாகும். வெளிப்படையான ஃபிக்ஹா, ஹதீஸ்கள், திருக்குர்ஆனின் சில விரிவுரைகள் போன்றவற்றை அஹ்மதி அல்லாத சில ஆலிம்கள் கூட உங்களை விட அதிகம் படித்துள்ளனர். அவர்கள் அதனை படித்து அதனை எடுத்துரைக்கவும் அவர்களால் முடியும். ஆனால் நீங்களோ காலத்தின் நீதிநெறி தீர்ப்பவரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கற்றுத் தந்த மற்றும் புரிய வைத்த ஞானங்களை நீங்கள் எடுத்துரைக்க வேண்டும். அதே மார்க்க சட்டத்தை தான் நாம் செயல்படுத்த வேண்டும். அதுவே திருக்குர்ஆனின் விரிவுரையாகும். அதுவே ஹதீஸின் விளக்கங்களும் ஆகும்.

அதனையே நாம் உலகிற்கு எடுத்தரைக்க வேண்டும். அதற்காக நீங்கள் முயற்சி செய்ய நேரிடும். உங்களின் அறிவை அதிகரித்துக் கொள்ள நேரிடும். பின்னர் அல்லாஹ்விடம் உதவி வேண்ட நேரிடும். உங்களது அறிவை அதிகரித்துக் கொள்வதற்கும் அல்லாஹ்விடம் உதவி வேண்டுங்கள். உங்களின் ஆன்மீக முன்னேற்றங்களுக்கும் அல்லாஹ்விடத்தில் உதவி வேண்டுங்கள். மேலும் இந்த நாட்டில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காகவும் அல்லாஹ்விடத்தில் உதவி வேண்டுங்கள். எதிர்ப்புகள் நீங்குவதற்காகவும் அல்லாஹ்விடத்தில் உதவி வேண்டுங்கள். உங்களது நாட்டை அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து பாதுகாப்பதற்காகவும் அல்லாஹ்விடம் துஆ வேண்டுங்கள். எனவே மனிதர்கள் செய்ய வேண்டிய ஏராளமான துஆக்களை நீங்கள் செய்யுங்கள். ஓர் உத்வேகத்துடனும், உணர்வுடனும், துடிப்புடனும் இந்த துஆக்களை நீங்கள் செய்தால் பின்னர் பங்களாதேஷில் ஒரு புரட்சியை எவ்வாறு நீங்கள் கொண்டு வருவீர்கள்? என்பதை நீங்களே கண்டு கொள்வீர்கள். அடுத்து உங்கள் மீது சில கடுமைகளும் காட்டப்படும். அப்போது இந்த மக்கள் கடுமையும் சகித்துக் கொண்டுள்ளனர். இப்போது இவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்று அல்லாஹ் கூறுவான். அப்போது இந்த ஊக்கம் அளிக்கப்படும்.

♦ இதே சந்திப்பில் மற்றொரு முரப்பி சாஹிப் ஹுஸூர் அவர்களிடம் இவ்வாறு கேட்டார்: என பகுதியை சார்ந்த மக்கள் சுயமே தங்களை முஸ்லிம்கள் என்று கூறுகின்றனர். ஆனால் இஸ்லாத்துடன் அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. அவர்களுக்கு எப்படி தப்லீக் செய்ய வேண்டும்.

ஹுஸூர் அவர்கள் இந்த கேள்விக்கு கீழ்க்கண்ட சொற்களில் பதிலளித்தார்கள். ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அவர்களிடம் கூறுங்கள். நீங்கள் முஸ்லிம்களாக இருக்கின்றீர்கள். அஹ்மதிய்யா

*(தொடர்ச்சி 8 வது பக்கம்...)*

## ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் ஆஸ்திரேலியா சுற்றுப் பயணம் (செப்டம்பர் 2013)

**21 அக்டோபர் 2013 (திங்கட்கிழமை)**

ஹுஸூர் (அய்ய) அவர்கள் காலை 5:10 மணிக்கு மஸ்ஜித் பைத்துல் ஹுதாவிற்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்கள் தமது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த தபால்கள், ஃபேக்ஸ்கள், கடிதங்கள் மற்றும் அறிக்கைகளை ஹுஸூர் அவர்கள் படித்து விட்டு வழிகாட்டல்கள் வழங்கினார்கள். காலை 11:20 மணிக்கு ஹுஸூர் (அய்ய) அவர்கள் தமது அலுவலகத்திற்கு வருகை தந்தார்கள். மவ்லவி நஸீருல் ஹஸன் சாஹிப் அவர்கள் ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்காக வருகை தந்திருந்தார்கள். எனவே ஹுஸூர் (அய்ய) அவர்களை அன்னார் சந்தித்தார்கள். 20 நிமிடம் வரை இந்த சந்திப்பு தொடர்ந்தது. அதன் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள்.

**சிட்னி நகரத்தின் சுற்றுப் பகுதியில் நடை பயணம்**

இன்று சிட்னி ஜமாஅத் சிட்னி நகரத்திலுள்ள நல்ல ஆரோக்கியமான இடத்திற்கு சுற்றுலா செல்வதற்கு நிகழ்ச்சியை வடிவமைத்திருந்தது. ஹுஸூர் (அய்ய) அவர்கள் 1:00 மணிக்கு தமது தங்குமிடத்திலிருந்து வெளியே வருகை தந்தார்கள். மேலும் சுற்றுலாவிற்கு புறப்பட்டார்கள். சிட்னி நகரத்தின் ஒரு பக்கம் மஸ்ஜித் பைத்துல் ஹுதாவிலிருந்து சுமார் 1:15 மணி நேரம் தொலைவில் கடற்கரை ஓரத்தில் பசுமையான மலைகளின் தொடர் உள்ளது. இந்த மலைகள் மற்றும் கடலுக்கு நடுவே பல்வேறு குடியிருப்புகள் உள்ளன. இந்த அனைத்து பகுதியும் மிகவும் அழகாக உள்ளது. அழகிய நகரங்களை உள்ளடக்கியதாக உள்ளது. இங்கு ஓர் உயரமான இடத்தில் உள்ள Panorama House என்ற உணவகத்தில் நிகழ்ச்சிக்கேற்ப மதிய உணவு உண்ணப்பட்டது. அதன் பிறகு அங்கிருந்து வெளியேறி ஹுஸூர் அவர்கள் பல்வேறு இடங்களில் அமைந்திருந்த அந்த அழகிய காட்சிகளை கண்டார்கள். வீடியோவும் எடுத்தார்கள். சிறிது நேரம் நடை பயணமும் சென்றார்கள். 4:45 நிமிடத்தில் அங்கிருந்து திரும்பிச் செல்வதற்கு புறப்பட்டோம். மேலும் 6:00 மணியளவில் ஹுஸூர் அவர்கள் பைத்துல் ஹுதாவிற்கு வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்கள் சிறிது நேரம் தமது தங்குமிடத்திற்கு சென்றார்கள்.

இன்றைய தினம் குத்தாமுல் அஹ்மதிய்யா ஆஸ்திரேலியா ஒரு கால்பந்தாட்ட போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தது. காதிம்கள் இரு அணிகளாக பிரிக்கப்பட்டிருந்தனர். ஓர் அணியில் 30 வயதிற்கு கூடுதலான இளைஞர்கள் இருந்தனர். மற்றொரு அணியில் 30 வயதிற்கு குறைவான இளைஞர்கள் இருந்தனர். 6:50 நிமிடத்தில் ஹுஸூர் (அய்ய) அவர்கள் பரிவு கூர்ந்து தமது காதிம்களின் இந்த போட்டியை பார்ப்பதற்காக வருகை தந்தார்கள். ஹுஸூர் அவர்கள் வருகை தந்ததும் இரண்டு அணிகளும் ஒரு வரிசையில் அணிவகுத்து நின்றன. ஹுஸூர் அவர்கள் அனைத்து வீரர்களுடனும் கை குலுக்கினார்கள். மேலும் ஆட்டம் துவங்குவதற்கு முன்பு துஆ செய்து வைத்தார்கள். ஆட்டத்திற்கான நேரம் சுமார் 30 நிமிடமாக இருந்தது. ஆட்டம் சமனில் முடிவடைந்தது. பின்னர் பெனால்டி ஷாட் முறையில் 30 வயதை கடந்த வீரர்களைக் கொண்ட அணி ஆட்டத்தில் வெற்றி பெற்றது.

ஹுஸூர் அவர்கள் பரிவுகூர்ந்து வெற்றி பெற்ற அணிக்கு கோப்பையை வழங்கினார்கள். மேலும் இரண்டு அணி வீரர்களுக்கும் பரிசுகளை வழங்கினார்கள். இரண்டு அணி வீரர்களும் மீண்டும் ஒரு முறை ஹுஸூர் அவர்களுடன் கை குலுக்குவதற்கு நற்பேறு பெற்றனர். தனித்தனியாக குழு நிழற்படமும் எடுத்துக் கொண்டனர்.

ஃபிஜி தீவு மற்றும் பாகிஸ்தானுடன் தொடர்பு கொண்ட காதிம்களாக இரு அணியைச் சார்ந்த வீரர்களும் இருந்தனர். அவர்கள் தற்போது ஆஸ்திரேலியாவிற்கு வருகை தந்து அங்கேயே வசித்து வருகின்றனர். ஆட்டத்தின்போது ஒரு காதிமிற்கு காயம் ஏற்பட்டு விட்டது. ஹுஸூர் அவர்கள் திரும்பிச் செல்லும்போது பரிவுகூர்ந்து அந்த காதிமிடம் சென்றார்கள். (அவருக்கு மைதானத்திற்கு வெளியில் மருத்துவ உதவி வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது). அவரிடம் உடல் நலம் விசாரித்தார்கள். ஃபிஜியைச் சேர்ந்த அந்த இளைஞர் எவ்வளவு நற்பேறு பெற்றவராக இருந்தார். அவருக்கு தமது அன்பிற்குரிய எஜமானரின் எல்லையற்ற பரிவும் நேசமும் கிடைத்தது!

இதற்குப் பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்கள் இங்கிருந்து திரும்பிச் செல்லும்போது விருந்தினர் இல்லத்திற்கு சென்றார்கள். ஹுஸூர் அவர்கள் ஊழியர்களிடம் இரவு உணவு குறித்து கேட்டறிந்தார்கள். உருளைக்கிழங்கு இறைச்சியும், சாதம் போன்றவையும் சமைக்கப்பட்டிருந்தன. அந்த சந்தர்ப்பத்தில் விருந்தினர் இல்லத்தின் அனைத்து ஊழியர்களும் தமது எஜமானருக்கு அருகில் நின்று நிழற்படம் எடுத்துக் கொண்டனர். இதன் பிறகு 7:20 மணியளவில் ஹுஸூர் அவர்கள் மஸ்ஜித் பைத்துல் ஹுதாவிற்கு வருகை தந்தார்கள். மேலும் மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு 7:50 மணியளவில் ஹுஸூர் அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள்.

**22 அக்டோபர் 2013 (செவ்வாய்கிழமை)**

ஹுஸூர் (அய்ய) அவர்கள் காலை 5:10 மணிக்கு மஸ்ஜித் பைத்துல் ஹுதாவிற்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றார்கள்.

**சிட்னியிலிருந்து பிரிஸ்பனிற்கு புறப்படுதல்**

இன்று நிகழ்ச்சி நிரலுக்கேற்ப சிட்னியிலிருந்து ஆஸ்திரேலியாவின் மற்றொரு நகரமான பிரிஸ்பன் நகருக்கு புறப்பட வேண்டியதிருந்தது. 10:45 மணியளவில் ஹுஸூர் (அய்ய) அவர்கள் தமது தங்குமிடத்திலிருந்து வெளியில் வருகை தந்தார்கள். சிட்னி இன்டர்நேஷனல் விமான நிலையத்திற்கு புறப்பட்டார்கள். 11:40 மணியளவில் ஹுஸூர் அவர்கள் விமான நிலையத்தை வந்தடைந்தார்கள். சிறப்பு வரவேற்பறையில் ஹுஸூர் அவர்கள் சிறிது நேரம் தங்கிய பிறகு சுமார் 12:15 மணியளவில் ஹுஸூர் (அய்ய) அவர்கள் விமானத்தில் ஏறி அமர்ந்தார்கள். ஆஸ்திரேலியன் ஏர்லைன் நிறுவனத்திற்கு சொந்தமான Qantas Air QF528 என்ற விமானத்தின் புறப்படும் நேரம் 12:25 மணியளவில் இருந்தது. புறப்படுவதற்கு முன்னதாக விமானத்தின் கேபினிலிருந்து விமானி இவ்வாறு அறிவித்தார்: அதாவது விமானத்தில் ஒரு தொழில்நுட்ப கோளாறு உள்ளது. அதனை பொறியாளர்கள் சரி செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே சிறிது தாமதமாக விமானம் புறப்படும் என அறிவித்தார். 10 நிமிடம் கழிந்த பிறகு, பழுது சரியாகவில்லை. தற்போது இறுதி முயற்சி செய்யப்பட்டு வருகின்றது. நாம் வேறு விமானத்திற்கு மாற்றப்படுவதும் சாத்தியமாகும் என்றும் கூறினார். பின்னர் 1:00 மணியளவில் தொழில்நட்ப கோளாறு இன்னும் சரியாகவில்லை. தற்போது நாம் விமானத்தை மாற்ற இருக்கின்றோம். அனைத்து பயணிகளும் விமானத்திலிருந்து இறங்கி விடுங்கள். வேறு விமானத்தில் பயணம் செய்வதற்கு Gate No.2-ற்கு சென்று விடவும் என்றும் அவர் அறிவித்தார். நல்லது நடந்துள்ளது. விமானம் புறப்படுவதற்கு முன்பாகவே விமானத்திலிருந்த தொழில்நுட்ப கோளாறு நமக்கு தெரிந்து விட்டது. விமானம் மேலே பறந்து சென்றிருந்தால் பின்னர் நம்மால் விமானத்தை மாற்றியிருக்க முடியாது என்றும் விமானி அறிவித்தார். எனவே அந்த விமானத்திலிருந்து இறங்கி ஹுஸூர் (அய்ய) அவர்கள் Gate No.2-லுள்ள Waiting Area-விற்கு சென்று விட்டார்கள். சிறிது நேரம் அங்கு தங்கிய பிறகு சுமார் 2:00 மணியளவில் மீண்டும் புதிய விமானத்தில் ஏறி அமர்ந்தார்கள். இவ்வாறு Qantas Air QF528 என்ற விமானம் 2:20 மணியளவில் சிட்னி விமான நிலையத்திலிருந்து பிரிஸ்பன் நகரத்திற்கு புறப்பட்டுச் சென்றது. பிரிஸ்பன் நகரம் ஆஸ்திரேலியாவின் குவின்ஸ்லேண்ட் மாநிலத்தின் தலைநகரமாகும். சுற்றுலா ரீதியில் ஆஸ்திரேலியாவின் ஒரு பிரபலமான நகரமாகும். இங்கு சுற்றிப் பார்ப்பதற்கு மிகவும் அழகிய இடங்கள் உள்ளன. மனதை கவரும் காட்சிகள் உள்ளன. உதாரணமாக, Big Pineapple மற்றும் பிரிஸ்பனின் கடற்கரை பகுதியான கோல்ட் கோஸ்ட்டில் ஏராளமான பூங்காக்கள் உள்ளன. அதில் Theme Park மிகவும் பிரபலமானதாகும். பிரிஸ்பன் நகரத்தின் கால நிலை ஆஸ்திரேலியாவின் மிகச் சிறந்த கால நிலையாகும். Hot Summers மற்றும் Mildwinters நாட்களிலும் இங்கு ஆண்டு முழுவதும் சூரியன் ஒளி வீசுகின்றது. பிரிஸ்பன் நகரம் Sunshine ஸ்டேட் என்றும் அழைக்கப்படுகின்றது. இந்த நகரத்தின் மக்கள் தொகை 2.2 மில்லியன் ஆகும். சுமார் 1:25 மணி நேரம் விமானம் பயணித்த பிறகு பிரிஸ்பன் நகரத்தின் உள்ளூர் நேரத்திற்கேற்ப 2:45 மணியளவில் விமானம் பிரிஸ்பன் இன்டர்நேஷனல் விமான நிலையத்தில் தரை இறங்கியது. பிரிஸ்பனின் நேரம் சிட்னி நேரத்திலிருந்து 1 மணி நேரம் தாமதமாகும். (தொடரும்)

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

முரண்பாடு உள்ளது. அதனால் தான் அவர்கள் விலகிச் செல்கின்றனர். அவர்களுக்கு தர்பிய்யத் வழங்குங்கள். எனவே தான் பெரியவர்களுக்கு தர்பிய்யத் வழங்குங்கள் என்று நான் கூறுகின்றேன். தேசிய ஆமிலாவிற்கு தர்பிய்யத் வழங்குங்கள். உங்களது உள்ளூர் செயற்குழு உறுப்பினர்களுக்கு தர்பிய்யத் வழங்குங்கள். அப்போது தான் பிள்ளைகள் அவர்களின் முன்னுதாரணத்தை பார்த்து தங்களை சீர்படுத்திக் கொள்வார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பணி என்னவென்றால், நீங்கள் எந்தவொரு பொறுப்பாளரிடமும் பைஅத் செய்யவில்லை. அவர்களுடன் உங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. நீங்கள் அஹ்மதிய்யத்தை உண்மை என ஒப்புக் கொண்டுள்ளீர்கள். மேலும் பைஅத் செய்துள்ளீர்கள் என்றால் பின்னர் நீங்கள் அவர்களை பார்க்காதீர்கள். சரியான போதனை எது? மேலும் காலத்தின் கலீஃபா உங்களுக்கு என்ன கூறுகின்றார்? என்று பாருங்கள். கிலாஃபத்துடன் தொடர்பு வைத்தால் பின்னர் நீங்கள் சரியாக இருப்பீர்கள்.

ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இரண்டாவது விஷயம் என்னவென்றால், தர்பிய்யத்தில் குறை உள்ளது. தொழுகைகளிலும் குறைபாடு உள்ளது.

Contemporary Issues உள்ளன. அதன் தலைப்புகளில் பரஸ்பர உரையாடல்களை நடத்துங்கள். மேலும் சம்பிரதாயமான கூட்டங்களை நடத்தாதீர்கள். மாறாக, கல்வி அறிவு படைத்த இளைஞர்களின் பிரச்சனைகள் என்ன உள்ளன? என்பதை பாருங்கள். அவர்களை எவ்வாறு Attract செய்து உங்களுக்கு அருகில் கொண்டு வர முடியும் என்று சிந்தியுங்கள். பல்வேறு தலைப்புகளில் அவர்களை கொண்டு கருத்தரங்குகளை நடத்துங்கள். அவர்களின் ஆர்வத்திற்குரிய விஷயங்களை ஏற்படுத்துங்கள். அவ்வாறு செய்தால் கொஞ்சம் இல்லையென்றாலும் கொஞ்சம் Attatchment ஏற்பட்டு விடும். அவர்கள் நெருங்கி வரும்போது அத்துடன் மார்க்க போதனைகளையும் அவர்களுக்கு வழங்கி வாருங்கள்.

ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: பௌதீகம் அதிகம் உருவாகி வருவதால் தான் மார்க்கத்திலிருந்து விலகுகின்றனர். உலகில் எல்லா இடங்களிலும் பொதுவாக பௌதீகத்தின் பக்கமே கவனம் உள்ளது. சுவீடன் மட்டுமல்ல. எல்லா இடங்களிலும் இதே நிலை தான் உள்ளது. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இருக்குமென்றால் பின்னர் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்வதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இந்த காலத்தில் வழங்கப்பட்டுள்ள கட்டளைகளின்படி அமல் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு கூறுங்கள். பெரியவர்கள் ஒரு பணியை சரியாக செய்யவில்லையென்றால் அதனை சரி செய்வது இளைஞர்களின் பணியாகும். அவர்கள் முன்னால் வர வேண்டும். அப்போது தான் நமது எதிர்கால சந்ததிகளை பாதுகாக்க முடியும். அவர்கள் மீது பொறுப்புகளை சுமத்துங்கள். நீங்கள் பொறுப்புகளை சுமந்து கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு உணர்வூட்டுங்கள். யாராவது ஒரு பெரியவரின் தவறான நடவடிக்கையை பார்த்து நீங்கள் உங்களது மார்க்கத்திலிருந்து விலகாதீர்கள் என்று கூறுங்கள். இந்த அடிப்படையில் திட்டம் வகுத்து செயல்படுங்கள்.

கல்வி அறிவு படைத்த இளைஞர்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்குங்கள். பின்னர் ஆய்வு செய்து ஒரு திட்டத்தை உருவாக்குங்கள். அவர்களை எவ்வாறு அருகில் கொண்டு வர முடியும்? என்பது குறித்து திட்டம் தீட்டுங்கள். திட்டம் உருவாகிய பிறகு அது குறித்து எனக்கும் அனுப்புங்கள். இளைஞர்களுடன் தொடர்பு வைப்பது முபல்லிக்மார்களின் பணியும் ஆகும். இளைஞர்களை அருகில் கொண்டு வருவதற்கு அதிகம் அதிகமாக முயற்சி செய்யுங்கள். குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் மிஷனரி இன்சார்ஜ் ஆகியோர் பரஸ்பர ஒத்துழைப்புடன் ஒரு திட்டம் தீட்டுங்கள். முபல்லிக்மார்களை அதில் பங்கு பெறச் செய்யுங்கள். ஜமாஅத் அமீர்மார்களும் தமது முழுமையான ஒத்துழைப்பை அவர்களுக்கு வழங்குங்கள். தர்பிய்யத் துறையும் அதில் பங்கு பெறட்டும். ஏனைய கிளை அமைப்புகளையும் அதில் பங்கு பெறச் செய்யுங்கள். குத்தாமுல் அஹ்மதிய்யா சதரும், அன்சாருல்லாஹ் சதரும், லஜ்னா தலைவியும் அதில் பங்கு பெறட்டும்.

கூடுதல் செகரட்டரி தர்பிய்யத் மற்றும் புதிய அஹ்மதிகளுக்கான வக்ஃபே ஜதீத் செயலருக்கு ஹுஸூர் அவர்கள் வழிகாட்டல் வழங்கியவாறு இவ்வாறு கூறினார்கள்:

மூன்று வருடங்களுக்குப் பிறகு அவர்கள் Main Stream–ல் பங்கு பெறும் அளவிற்கு நீங்கள் அவர்களின் தர்பிய்யத்திற்காக நிகழ்ச்சிகளை வடிவமையுங்கள். ஒரு முஸ்லிம் அல்லாத பின்னணியிலிருந்து வந்துள்ளார் என்றால் அவருக்கு தொழுகை என்றால் என்ன? சூரா ஃபாத்திஹா என்றால் என்ன? திருக்குர்ஆன் எவ்வாறு ஓத வேண்டும்? போன்றவை அவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். ஜமாஅத் என்பது என்ன? ஜமாஅத்தின் அமைப்பு என்பது என்ன? கிலாஃபத் என்பது என்ன? கிலாஃபத்துடன் எவ்வாறு தொடர்பு வைக்க வேண்டும்? இவை பற்றி அவர்களுக்கு சரியான அறிவு இருக்க வேண்டும். பின்னர் சந்தாக்களின் அமைப்பு என்பது என்ன? அதில் எவ்வாறு பங்கு பெற வேண்டும்? என்று இந்த அனைத்து பயிற்சிகளும் மூன்று ஆண்டுகளுக்குள் முழுமை பெற்றிருக்க வேண்டும். அவர்களுக்கான இஜ்திமாவையும் நடத்தி வாருங்கள்.

♦ ஹுஸூர் (அய்ய) அவர்கள் வக்ஃபே ஜதீத் செயலரிடம் கூறினார்கள்: நீங்கள் அத்ஃபால் பதிவேட்டின் பக்கமும் கவனம் செலுத்துங்கள். குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் லஜ்னா அமைப்பின் ஒத்துழைப்புடன் சிறுவர்கள் மற்றும் சிறுமியர்களுக்கு வக்ஃபே ஜதீதின் பக்கம் கவனமூட்டுங்கள்.

♦ தப்லீக் பற்றி ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இந்நாட்களில் ஆன்லைன் மூலம் தப்லீக் அதிகமாக நடக்கத் தொடங்கி விட்டது. வாட்ஸ்அப் மற்றும் சமூக வலைதளங்களில் தப்லீக் நடைபெறுகிறது. மக்களிடம் என்னென்ன கேள்விகள் உள்ளன? என்னென்ன பிரச்சனைகள் எழுகின்றன? என்று பார்க்க வேண்டும். பல்வேறு வலைதளங்களுக்கு சென்று நீங்கள் அவர்களுக்கு இதனை கூற வேண்டும். அதாவது நாம் இந்த நிலைமைகளில் அல்லாஹ்வின் பக்கம் அதிகமாக குனிய வேண்டும் என்று கூறுங்கள். இறைவனின் பக்கம் வர வேண்டும். நம்மை படைத்தவனை அடையாளம் காண வேண்டும். அவ்வாறல்லாமல் நாத்தீகர்களாக மாறி இறைவனை விட்டு விடக்கூடாது. இறைவன் துஆக்களை ஒப்புக் கொள்வதில்லை. அல்லது இறைவன் இல்லை. அல்லது உலகமே அனைத்தும் என்ற சிந்தனைகளையெல்லாம் கைவிட்டு விட வேண்டும். உலகத்தை காப்பாற்ற வேண்டுமென்றால் இதை செய்யுங்கள். ஏனென்றால் இதன் பிறகு என்ன சிக்கல்கள் வருமோ அது இந்த தொற்றிற்கு பிறகு உலகத்தின் பொருளாதாரம் shrink ஆகிக் கொண்டே செல்லும்.

அப்போது உலகம் ஒருவர் மற்றவரின் செல்வத்தை அபகரிப்பதற்கு முயற்சி செய்யும். ஒருவர் மற்றவரின் செல்வத்தை அபகரிக்க முயற்சி செய்யும்போது பின்னர் போர்கள் தொடங்கி விடும். அதற்காக அணிகள் உருவாகும். அணிகள் உருவாக தொடங்கி விட்டன. எனவே இதிலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறை என்னவென்றால் இறைவனின் பக்கம் வர வேண்டும். மேலும் உங்களின் பொறுப்புகளை புரிய வேண்டும்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: எனவே ஆன்லைன் மூலமாக தப்லீக் செய்யுங்கள். எப்போது சந்தர்ப்பம் கிடைத்தாலும் இந்த தூதுச் செய்தியை எட்ட வையுங்கள். லாக்டவுனில் இந்த வழிமுறையை மேற்கொள்ளுங்கள். Locadown–ல் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்போது, சிறிதளவு ஜன்னலை திறக்கும்போது மேலும் வெளிச்சம் தென்படும்போது பின்னர் வெளியேறுங்கள். தப்லீக் செய்யுங்கள்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: சில அவசியமான விஷயங்களை நான் கூறி விட்டேன். இதற்கேற்ப உங்களது பாலிஸிகளை உருவாக்கிக் கொள்ளுங்கள். இதன்படி அமல் செய்யுங்கள். எப்போதும் நினைவிற் கொள்ளுங்கள். அல்லாஹ் நமது ஒவ்வொரு சொல்லையும், செயலையும் பார்க்கின்றான். கேட்கின்றான். எனவே ஒவ்வொரு பணியையும் நாம் அல்லாஹ்விற்காக செய்ய வேண்டும். மேலும் அவனுக்காகவே நாம் நமது அனைத்து ஆற்றல்களையும், நமது அனைத்து Potentiais–யும் பயன்படுத்த வேண்டும். ஏனென்றால் அப்போது தான் ஜமாஅத்தின் சரியான சுறுசுறுப்பான ஊழியராக நம்மால் மாற முடியும். மேலும் ஜமாஅத்திற்கு சரியான முறையில் நம்மால் தொண்டும் ஆற்ற முடியும்.

அல்லாஹ் உங்களின் அனைவரின் பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக.

(அறிக்கை: அப்துல் மாஜித் தாஹிர் சாஹிப், அடிஷ்னல் வகீலுத் தஃப்ஸீர் இஸ்லாமாபாத், யூ.கே.

நன்றி: அல்ஃபஸல் இன்டர்நேஷனல் பத்திரிகை 30 அக்டோபர் 2020)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 09 Sep 2021 Issue No. 36

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களுடன் அஹ்மதிய்யா ஜமாஅத் சுவீடனின் தேசிய செயற்குழுவின் காணொளி சந்திப்பு (Virtual Meeting)

**அஹ்மதிய்யா ஜமாஅத் சுவீடன் தேசிய செயற்குழு சந்திப்பு (இறுதி பகுதி)**

♦ தேசிய வஸிய்யத் செயலரிடம் பல்வேறு விஷயங்களை விசாரித்த பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

வஸிய்யத் செய்ய வைத்து, எண்ணிக்கையை அதிகரிப்பது மட்டுமே நோக்கமாக இருக்கக்கூடாது. அவர்களின் இறையச்சத்தின் தரத்தை அதிகரிப்பதற்கும் முயற்சிகள் ஏதும் செய்யப்பட்டுள்ளதா?

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: வஸிய்யத் செய்தவர் ஐவேளை தொழுபவராக இருக்க வேண்டும். தினமும் திருக்குர்ஆன் ஓதுபவராக இருக்க வேண்டும். திருக்குர்ஆனின் பொருளை அறிந்து அதன் கட்டளைகளின்படி அமல் செய்பவராக இருக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களை படிப்பவராக இருக்க வேண்டும். காலத்தின் கலீஃபாவின் கூற்றுகளை செவிமடுப்பவராக இருக்க வேண்டும். காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களை தொடர்ந்து கேட்பவராக இருக்க வேண்டும். தமது வீட்டில் தமது மனைவி மக்களின் தர்பிய்யத்தின் பக்கம் கவனம் இருக்க வேண்டும். மூஸியின் சிறப்பம்சங்கள் இதுவே ஆகும்.

அடுத்து வஸிய்யத் செய்தவர்கள் பெண்கள் என்றால் அவர்கள் தங்களது பர்தாவின் தரத்தை சிறந்ததாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இருவரும் தங்களது ஒழுக்கங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு முன்னுதாரணமான மூஸி என்பவர் பொருள் தியாகத்தின் அடிப்படையிலும், தமது மார்க்க நிலையின் அடிப்படையிலும் ஆன்மீக நிலையின் அடிப்படையிலும், ஜமாஅத் மற்றும் அதன் நிர்வாகத்துடனான தொடர்பின் அடிப்படையிலும், கிலாஃபத்துடனான தொடர்பின் அடிப்படையிலும் உயர்தரமானவராக இருக்க வேண்டும். அப்போது தான் வஸிய்யத் செய்ததற்கு பயன் இருக்கும். இல்லையென்றால் வெறும் பைசா ஒன்றுசேர்ப்பதற்காக நாம் வஸிய்யத் செய்ய வைக்கக்கூடாது.

♦ ஹுஸூர் (அய்ய) அவர்கள் தேசிய ஆமீலாவின் உறுப்பினர்களுக்கு அறிவுரை செய்தவாறு இவ்வாறு கூறினார்கள்: தேசிய ஆமிலா அனைவருக்கும் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். உங்களது ஜமாஅத்தின் உறுப்பினர்களும் தேசிய ஆமிலாவை தங்களது ரோல் மாடலாக கருத வேண்டும். நீங்கள் மக்களுக்கு என்ன முன்னுதாரணத்தை வெளிப்படுத்துகின்றீர்கள்? என்று தேசிய ஆமிலாவிற்கு கவனம் இருக்க வேண்டும்.

♦ ஹுஸூர் (அய்ய) அவர்கள் தேசிய செகரட்டரி மால் அவர்களிடம் உரையாடியவாறு சந்தா கொடுக்கக்கூடியவர்களை குறித்து இவ்வாறு கூறினார்கள்:

சந்தா கொடுக்க முடியாத அளவில் ஒருவரின் பொருளாதார நிலை இருக்குமென்றால் பின்னர் எங்களால் சந்தா கொடுக்க இயலவில்லை என்று எனக்கு எழுதி அனுமதி பெற்றுக் கொள்ளட்டும். ஆனால் தவறான கூற்றின் மூலமாக தமது வருமானத்தை குறைத்து எழுதக்கூடாது. சந்தா என்பது பொருள் தியாகமாகும் என்று அஹ்மதிய்யா ஜமாஅத் கூறுகின்றது. தியாகம் என்பதன் பொருளே துன்பத்தில் வீழ்வதாகும். ஆனால் தமது மனைவி மக்களின் உரிமைகளையும் வழங்க வேண்டும். உங்களால் உரிமையை செலுத்த முடியாது என்று நீங்கள் கருதினால் பின்னர் நீங்கள் அதில் விதிவிலக்கு பெற்றுக் கொள்ளலாம். ஆனால் தவறான கூற்றை முன் வைக்கக்கூடாது. தவறான கூற்றை முன் வைத்தால் பின்னர் அல்லாஹ் உங்களின் செல்வத்தில் பரக்கத்தை ஏற்படுத்த மாட்டான்.

♦ இதன் பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்கள் தேசிய தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸி செயலரிடம் இவ்வாறு கேட்டார்கள்: இந்த வருடத்தில் எத்தனை நபர்கள் வக்ஃபே ஆர்ஸி செய்துள்ளனர்? நான்கு நபர்கள் வக்ஃபே ஆர்ஸி செய்துள்ளனர் என்று அந்த செயலர் சாஹிப் கூறினார். அப்போது அவ்வளவுதானா? என்று ஹுஸூர் (அய்ய) அவர்கள் கேட்டார்கள். ஆமிலாவின் உறுப்பினர்களே வக்ஃபே ஆர்ஸி செய்திருக்கலாமோ? அவ்வாறு செய்திருந்தால் உங்களின் எண்ணிக்கை கூடியிருக்கும். குறைந்தபட்சம் 15, 20 எண்ணிக்கையாவது ஆகி இருக்கும். நீங்கள் வெளியில் செய்கின்ற பணிகளை ஆமிலாவிலிருந்து செய்யுங்கள். விளக்கின் கீழ் இருட்டு ஆமிலா உறுப்பினர்கள் வக்ஃபே ஆர்ஸி செய்யுங்கள். நீங்கள் சுயம் வக்ஃபே ஆர்ஸி செய்துள்ளீர்களா? என்று ஹுஸூர் (அய்ய) அவர்கள் அவரிடம் கேட்டார்கள். அதற்கு இல்லை என்று அந்த செயலர் கூறினார். நீங்கள் சுயமே வக்ஃபே ஆர்ஸி செய்யவில்லை என்றால் பின்னர் மக்கள் எந்த முன்னுதாரணத்தை பார்ப்பார்கள்?

நீங்கள் சுயமே இரண்டு வாரத்திற்கு வக்ஃபே ஆர்ஸி செய்து தப்லீக் செய்வதற்காக எங்கேயாவது செல்லுங்கள். அல்லது பிள்ளைகளுக்கு திருக்குர்ஆன் கற்றுக் கொடுங்கள். அல்லது வேறு ஏதாவது பணி செய்யுங்கள். ஆமிலா உறுப்பினர்கள் மக்களிடம் அதிகாரம் செலுத்துகின்றனர். நீங்களும் சுயம் பணி செய்து வாருங்கள். நீங்களும் சுயம் வக்ஃபே ஆர்ஸி செய்யுங்கள். பின்னர் உங்களின் முன்னுதாரணத்திலிருந்து மற்ற மக்களும் பின்பற்றுவார்கள்.

திருக்குர்ஆன் ஓதுவது தொடர்பாக ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: யூ.கேவிலிருந்து உலகளாவிய வகுப்புக்கான நிகழ்ச்சிகள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் ஒவ்வொரு நாடும் தத்தமது நிகழ்ச்சிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

♦ ஹுஸூர் (அய்ய) அவர்கள் தேசிய கல்வி செயலரிடம் இவ்வாறு கூறினார்கள்: மாணவர்களுக்கு கருத்தரங்கம் போன்ற ஏதாவது நிகழ்ச்சிகளை நடத்தி வாருங்கள். மார்க்க மற்றும் தற்போதைய உலக நிலவரத்தின் விஷயங்களில் கருத்தரங்குகளை நடத்த வேண்டும். ஒருவருக்கு ஒரு தலைப்பை கொடுங்கள். சொற்பொழிவுகளை ஆயத்தப்படுத்துங்கள். அப்போது தான் அந்த எழுதப்படிக்கத் தெரிந்த இளைஞர்களுக்கு ஜமாஅத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். மேலும் Contemporary Issues தொடர்பாக இஸ்லாம் என்ன கூறுகின்றது? என்பதும் அவர்களுக்கு தெரிய வரும். மேலும் அறிவியலின் பல்வேறு தலைப்புகள் தொடர்பாக இஸ்லாம் என்ன கூறுகின்றது? அந்த தலைப்புகளில் எவ்வாறு பேச வேண்டும்? என்பதும் அவர்களுக்கு தெரிய வரும். இதன் மூலம் ஆர்வம் ஏற்படும். மக்கள் உங்களுடன் இணைந்து கொள்வார்கள்.

♦ ரிஷ்தா நாதா செயலர் அவர்களிடம் ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அஹ்மதி இளைஞர்கள் வெளியில் திருமணம் செய்யத் தொடங்கி விட்டால் பின்னர் அஹ்மதி பெண்கள் எங்கே செல்வார்கள்? அஹ்மதி பெண்களை குறித்தும் ஏதாவவது கவலை கொள்ளுங்கள். அஹ்மதி பெண்களின் திருமணத்தை நடத்துவதற்கு கவலை கொள்ளுங்கள். இதன் பக்கம் அதிகம் கவனம் செலுத்துங்கள்.

♦ மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தேசிய செயலர் இவ்வாறு கூறினார்: ஹுஸூர்! இங்குள்ள பிள்ளைகள் மார்க்கத்திலிருந்து விலகி இருக்கின்றனர். அவர்களை எவ்வாறு மார்க்கத்திற்கு அருகில் கொண்டு வருவது? இது குறித்து ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: அவர்களின் ஆர்வத்திற்கேற்ப நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள். அவர்களை அருகில் கொண்டு வாருங்கள். அவர்களின் செயல் மற்றும் அவர்களின் கூற்றில்

*(தொடர்ச்சி 11வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad